




# வருடாந்த அறிக்கை -2013

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. கூட்டுரிமைத் தத்துவம் | 03 |
| 2. இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் | 07 |
| 3. தே.கா.ந.பொ. நிதிய சபை உறுப்பினர்கள் – 2012 | 09 |
| 4. தவிசாளரின் மீளாய்வு | 11 |
| 5. முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும் | 14 |
| 6 நிலைபெறத்தக்க அறிக்கையிடல் | 40 |
| 7. ஆளுகை அறிக்கையிடல் – நிறுவன ஆளுகை | 46 |
| 8. ஆளுகை அறிக்கையிடல் – நிறுவன இடர் முகாமைத்துவம் | 58 |
| 9. நிதிக் கூற்றுக்கள் -2012 | 67 |
| 10. கணக்காய்வாளர் அறிக்கை | 88 |
| 11. ஒரே பார்வையில் எட்டு ஆண்டுகள் | 105 |
| 12. கூட்டுரிமைத் தகவல்கள் | 108 |



# 1. கூட்டுரிமைத் தத்துவம்




## தொலைநோக்கு

# தேவையுள்ள சகல துறைகளுக்கும் காப்பு வலையமைப்பையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தல்



## செயற்பணி

பின்வருமாறு நடவடிக்கை எடுப்பதன் ஊடாக இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் பங்கேற்றல்:

- சமூகத்தில் தேவையுள்ள சகல பிரிவினருக்கும் தாங்கிக்கொள்ளக்கூடியதும் வினைத்திறனானதும் முற்போக்கானதுமான காப்புறுதித் திட்டங்களை ஏற்படுத்தல்;

- மாற்றமுறும் தேவைகளிலிருந்து எழும் உயர் இடர்களிலிருந்து காப்புப் பெறுவதற்கு வளங்களைத் திரட்டுதல் மற்றும் வேறு ஒழுங்குகளுக்கு ஊடாக உள்நாட்டுச் சந்தைக்குத் தீர்வுகளை வழங்குதல்; மற்றும்

- உள்நாட்டுக் காப்புறுதிச் சந்தைக்கு மேலதிக ஆற்றலினை அளிப்பதற்கென இலங்கையில் மீள் காப்புறுதிச் சந்தை ஒன்றை ஏற்படுத்தல்.

# கூட்டுரிமைப் பெறுமானங்கள்




- **நம்பகத்தன்மை**
- **நேர்மை**
- **பொறுப்புக்கூறல்**
- **நிதி ரீதியான காத்திரத் தன்மை**
- **தொழில்வாண்மை மிக்க**



# 2. இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள்

- சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி உத்தேச இலக்குக் குழுக்களின் நன்மைக்காக காப்புறுதித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- மீள் காப்புறுதிச் சந்தையில் குறைந்தபட்சம் 50% இனைக் கைப்பற்றுவதற்கு மீள் காப்புறுதி நிகழ்ச்சித் திட்டத்தினை வடிவமைத்து முகாமை செய்தல்.

- தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சகல காப்புறுதித் திட்டங்களினதும் முகாமைத்துவத்தைத் தன்னியக்கப்படுத்துதல்.


- சகல பயனாளிகளுக்கும் கூடிய விளைதிறன் வாய்ந்த சேவையினை வழங்குவதற்கு மனித வளத்தை அபிவிருத்தி செய்தல்.

- அடுத்துவரும் 5 ஆண்டு காலப்பகுதியில் பங்குதாரர்களுக்கான உச்சபட்ச வருவாயை அடைந்துகொள்வதற்கென முதலீடுகளை வினைத்திறனாக முகாமை செய்தல்.

- கல்வி விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக உரிய காப்புறுதித் திட்டங்களில் பங்குபற்றுவதற்கென அக்கறை கொண்ட தரப்பினரை தூண்டுதலும் ஊக்குவித்தலும்.

- தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் எதிர்கால நடவடிக்கைகளை சமாளிப்பதற்கென போதிய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.

- இடர் முகாமைத்துவ அலகொன்றை நிறுவி சந்தை ஆய்வுகளை நடாத்துதல் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தியத்திற்கு அதன் எதிர்கால காப்புறுதித் தொழில் தொடர்பில் வழிகாட்டலினை வழங்குதல்.



# 3. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சபை உறுப்பினர்கள் -2013



**திரு. டி. விதானகமாச்சி**

தவிசாளர்



**திரு. ஜே. தடல்லகே**

(சபை உறுப்பினர்)



**கலாநிதி. லோகித்த சமரவிக்ரம**

(சபை உறுப்பினர்)



**திரு. டபிள்யூ. எச். பியதாச**

(சபை உறுப்பினர்)




**திரு. என். குலசேகர**

(சபை உறுப்பினர்)



**திரு. ஏ.கே. செனவிரத்ன**

(சபை உறுப்பினர்)



# 4. தவிசாளரின் மீளாய்வு

## ஆண்டறிக்கை – 2013 இனைச் சமர்ப்பித்தல்

2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடையும் ஆண்டிற்கான தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் எட்டாவது தொழிற்பாட்டு வருடமாக உள்ள அதன் ஆண்டறிக்கை – 2013 இனை சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

## பேரினப் பொருளாதார சுற்றாடல்

பொருளாதாரமானது 2012 ஆம் ஆண்டில் 6.4% இற்கு எதிராக 7.2%

வீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் மெய் ஆதனத் துறை என்பவை 5.9% ஆன வளர்ச்சியினைப் பதிவுசெய்த சேவைத் துறையானது 6.4% இனால் வளர்ச்சியடைந்தது. 2012 ஆம் ஆண்டில் அடைந்த 11% ஆன வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் காப்புறுதிக் கைத்தொழிலில் ஒப்பீட்டு ரீதியில் குறைவான 8% வளர்ச்சியினை குறித்துக் காட்டுவது கசப்பானது. 15% இலிருந்து 7% வரையில் அதன் குறைவான வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடைவதைக் கண்டுகொண்ட உயிர்சாரா துறையில் வீழ்ச்சியானது கூடுதல் முக்கியத்துமிக்கதாக இருந்தது. அத்துடன் இது பிரதானமாக வாகன இறக்குமதி மற்றும் தனியார் துறை கடன் செலவீடுகள் என்பவற்றின் குறைந்த வளர்ச்சி காரணமாக அமைந்தது.

## செயற்றிறனும் பங்களிப்பும்

குறைந்த வளர்ச்சி ஒன்றை அனுபவித்து வந்த காப்புறுதிச் சந்தை ஒன்றுக்குள் தொழிற்பட்ட போதிலும், தே.கா.ந.பொ. நிதியத்தினால் ஒழுங்கான நடவடிக்கைக்கூடாக 33.5 % இனால் அதன் தவணைக் கட்டண வருமானத்தினை அதிகரிக்கக்கூடியதாக இருந்தது. வருமானத்தினை அதிகரிப்பதற்கான பிரதான பங்களிப்புக்களாக 20% இலிருந்து 30% வரை கட்டாய மீளளிப்பின் அதிகரிப்புக் காரணமாக மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானத்தில் வளர்ச்சி, வீத திருத்தம் காரணமாக அக்ரஹார உறுப்பினர்களின் மூலம் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்களின் அதிகரிப்பு மற்றும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பயிர்க் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வருகின்ற புதிய உட்பாய்ச்சல் ஆகியன காணப்பட்டன.

தே.கா.ந.பொ. நிதியத்தினால் பிறப்பிக்கப்பட்ட இலாபமும் திரட்டு நிதியத்திற்கு ரூபா. 3.2 பில்லியனை அது மாற்றுவதற்கு ஏதுவாக ரூபா. 4.24 பில்லியனாக ஒத்ததாக அதிகரித்தது.

## பாராட்டு

இந் நிறுவனம் எவரின் கீழ் தொழிற்பட்டு வருகின்றதோ அக் கொள்கைத் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளையோர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரான கௌரவ. பிரதமருக்கும், பிரதி அமைச்சருக்கும், செயலாளருக்கும் அவர்களின் வழிகாட்டல் மற்றும் ஆதரவுக்காக எனது நன்றியினை

இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தே.கா.ந.பொ. நிதியமானது அதன் தொழிற்பாடுகள் பலவற்றில் நெருக்கமான இணைப்பினைக் கொண்டுள்ள திறைசேரிச் செயலாளர் மற்றும் திறைசேரியின் ஏனைய சகல அதிகாரிகளிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற ஆதரவிற்கும் நான் நன்றி கூறுகின்றேன். காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தும் இலங்கைக் காப்புறுதிச் சபையின் தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கும் எனது பாராட்டினைத் தெரிவிக்கவும் விரும்புகின்றேன்.

இறுதியாக சபையின் எனது சக உறுப்பினர்கள், எமது பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் அலுவலர் குழாத்தின் ஏனைய சகல உறுப்பினர்களிற்கும் அவர்களின் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பான சேவைகளுக்காக நான் நன்றி கூறுகின்றேன்.

ஒப்பம்,

மஞ்சுள டீ சில்வா

தவிசாளர்



# 5. முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

# 5.1 பொதுச் சுற்றாடல் மீளாய்வு

## காப்புறுதி தொழில் மீளாய்வு

2013 ஆம் ஆண்டில், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (NITF) உள்ளடங்கலாக காப்புறுதித் தொழிலில் செயற்படும் 21 செயற்படுநர்கள் காணப்பட்டனர். காப்புறுதிக் கம்பனிகளினால் பிறப்பிக்கப்பட்ட மொத்த முழு உழைத்த தவணைக் கட்டணமானது (GWP) முன்னைய வருடத்தின் ரூபா. 87,171 மில்லியன் கொண்ட GWP உடன் ஒப்பிடுகையில் ரூபா. 94,483 மில்லியனாக தொகையிடப்பட்டது. காப்புறுதிக் கம்பனிகளினால் உறுதிப்படுத்தப்பட்டவாறு, தே.கா.ந.பொ. நிதியத்துக்குச் சொந்தமான வே.க.சி.ப. (SRCC **&** T) தவணைக் கட்டணமானது ரூபா. 3,107 மில்லியனாக தொகையிடப்பட்டது மற்றும் அதனுடன் 2013 ஆம் ஆண்டு திரள் GWP ஆனது ரூபா. 97,590 மில்லியனாக தொகையிடப்பட்டது (2012: ரூபா. 89,410 மில்லியன்). 2012 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 11.06% உடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் 8.39% கொண்ட வளர்ச்சி வீதம் ஒன்றினை காப்புறுதித் தொழில் பதிவுசெய்துள்ளது. நீண்டகால காப்புறுதித் தொழிலானது ரூபா. 41,306 மில்லியன் கொண்ட தவணைக் கட்டண வருமானம் ஒன்றினை பதிவுசெய்ததுடன் வருடா வருடம் 10.22% இனால் வளர்ச்சியடைந்தது. 2013 ஆம் ஆண்டில், முதலீடுகள், சேமிப்புக்கள் மற்றும் ஓய்வுகள் என்பவற்றுடன் இணைந்த உற்பத்திப் பொருட்கள் மீது எங்கெல்லாம் கம்பனிகள் கவனத்தினைக் குவித்தனவோ அங்கெல்லாம் நீண்டகால காப்புறுதித் தொழிலின் தவணைக் கட்டண வளர்ச்சியானது பிரதானமாக வேறுபட்ட காப்புறுதி செய்தல் மற்றும் உற்பத்திப் பொருள் தந்திரோபாயங்களின் மூலம் செயற்படுத்தப்பட்டது. கடந்த வருடங்களில் உள்ளவாறு, மொத்த GWP இன் 56.28% கொண்ட பங்கு ஒன்றுடன் சந்தையினை பொதுக் காப்புறுதித் தொழில் வழிப்படுத்தியுள்ளது. 2012 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா. 49,694 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் பொதுக் காப்புறுதித் தொழிலானது ரூபா. 53,177 மில்லியன் கொண்ட தவணைக் கட்டண வருமானத்தினைப் பதிவுசெய்தது. பொதுக் காப்புறுதித் தொழிலின் GWP ஆனது வருடா வருடம் 7.01% இனால் வளர்ச்சி கண்டுள்ளது. காப்புறுதித் தவணைக் கட்டணமாக வெளிப்படுத்தப்படும் காப்புறுதி ஊடுருவலானது மொ.உ.உ (GDP) இன் சதவீதம் ஒன்றாக 2013 ஆம் ஆண்டில் 1.09 ஆக இருந்தது. நீண்டகால காப்புறுதித் தொழிலின் ஊடுருவலானது 2013 ஆம் ஆண்டில் 0.48 ஆக இருந்தது (2012:0.49) என்பதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒரு சிறிய குறைவினைப் பதிவுசெய்தது. கடந்த ஐந்து வருடங்களாக

நீண்டகால காப்புறுதித் தொழிலானது தனித்த கூறாக வளர்ச்சியடைந்துள்ள போதிலும் காப்புறுதி நோக்கிய பொதுமக்களின் மனோநிலை, போதுமானளவான விழிப்புணர்வு இல்லாமை, கொள்கை முகாமைத்துவத்தில் வினைத்திறனின்மை போன்ற பல்வேறுபட்ட காரணங்களினால் நீண்டகால காப்புறுதித் தொழிலின் ஊடுருவலானது ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருந்தது. பொதுக் காப்புறுதித் தொழிலின் ஊடுருவலும் 2012 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 0.66 இலிருந்து 2013 ஆம் ஆண்டில் 0.61 வரை ஒரு குறைவினைக் காட்டியுள்ளது.


## தே.கா.ந.பொ.நி. இன் வகிபாகம்

சுகாதாரக் காப்புறுதித் திட்டங்கள், பொதுக் காப்புறுதித் திட்டங்கள் மற்றும் மீள்காப்புறுதி போன்ற பல்வேறுபட்ட காப்புறுதி பாதுகாப்புக்களை வழங்குவதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினை நோக்கி தே.கா.ந.பொ.நி. பங்களிப்புச் செய்தது. இலங்கையில் பிரதான அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான அரசதுறை தொழிற்படைக்கும் நாட்டிற்கு அந்நியச் செலாவணியைக் கொண்டுவரும் வெளிநாட்டில் பணியிலமர்த்தப்பட்ட தொழிற்படைக்குமென வடிவமைக்கப்பட்ட மருத்துவக் காப்புறுதித் திட்டமானது நாட்டின் தொழிற்படையின் பெரும்பகுதியினரின் சுகாதாரத்தினைப் பாதுகாக்கின்றது. மீள்காப்புறுதி நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு மீள்காப்புறுதி வழங்குநர்களை நோக்கிய அந்நியச் செலாவணி வெளிப் பாய்ச்சலினைச் சேமிப்பதற்கும் அதேபோல பிரதான காப்புறுதி கம்பனிகளின் பெருமளவு கோரிக்கைத் தொகையின் ஒரு பகுதியினை உள்ளீர்ப்பதற்கும் தே.கா.ந.பொ.நி. இனால் இயலக்கூடியதாக இருந்தது. வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் தொடர்பான நிதியத்தின் முகாமைத்துவத்தின் மூலம் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத ஆபத்துக்களை தே.கா.ந.பொ.நி. இனால் தணிக்கக்கூடியதாக இருந்தது.

2013 ஆம் ஆண்டிற்காக அளிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் பகுதி ஒன்றாக, வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை ஆபத்துக்களினால் உண்டாகும் பயிர்களுக்கான சேதங்களிலிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு பயிர் காப்புறுதி திட்டம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. உர மானிய திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உரப் பை ஒன்றுக்கு ரூபா. 150 கொண்ட விதிப்பனவு, மற்றும் அனைத்து வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதி நிதியங்கள் என்பவற்றிலிருந்து வரிக்குப் பின்னரான இலாபத்தின் 1% என்னும் வீதத்தில் அறவிடப்படும் பயிர்க் காப்புறுதி விதிப்பனவு என்பவற்றின் வாயிலாக இந் நோக்கத்திற்காக இரு வருமான மூலங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 2013 ஆம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து மென்மேலும் இத் திட்டத்தினை விளம்பரப்படுத்தும் பணி தே.கா.ந.பொ.நி. இற்குப் பொறுப்பளிக்கப்பட்டது.


# 5.2.1 எட்டு ஆண்டுகளுக்கான நிதி மீளாய்வு

## வரைபடம் - 5.01:தேறிய உழைத்த தவணைக் கட்டண வருமானத்தின் கடந்தகாலப் போக்கு




திரட்டிய தேறிய உழைத்த தவணைக் கட்டண வருமானமானது 2009 ஆம் ஆண்டு வரை 4 வருடங்களுக்கு அதிகரித்த போக்கு ஒன்றினைப் பதிவுசெய்ததுடன் அதன் பின்னர் 2011 ஆம் ஆண்டு வரை கூடுதல் அல்லது குறைந்த விதத்தில் நிலையாகத் தொடர்ந்திருந்தது. இது 2011 ஆம் ஆண்டில் ஆகக் குறைந்த பெறுமதியினைப் பதிவுசெய்ததுடன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் உச்சபட்சத்திற்கு அதிகரித்தது.

## வரைபடம்- 5.02: திரட்டிய நிதியத்தின் கடந்தகாலப் போக்கு




திரட்டிய நிதியமானது 2010 ஆம் ஆண்டு வரை ரூபா. 9,695 மில்லியனாக அதிகரித்துள்ளது ஆனால் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டில் 12% இனால் குறைவடைந்தது. மேலும், 2012 ஆம் ஆண்டின் முடிவில் ரூபா. 5,935 மில்லியனாக நிதியம் குறைவடைந்துள்ளது. நிதியத்துக்கு மாற்றப்பட்ட நிறுத்திவைக்கப்பட்ட இலாபத்தின் மீது 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த தேறிய இலாபத்திற்கு மேற்பட்ட விதிப்பனவு ஒன்றினை விதித்ததன் விளைவாக திரட்டிய நிதியம் குறைவடைந்துள்ளது.

## 5.2.2 முதலீடு மற்றும் சேமிப்பு மீளாய்வு

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானமானது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் 12.29% இனால் அதிகரித்தது. மொத்த வருமானத்தில் 11.33% இனைப் பிரதிபலிக்கும் தே.கா.ந.பொ. நிதியத்தின் இரண்டாவது வருமான மூலமாக இவ் வருமானம் உள்ளது.

ஒத்த காலப்பகுதிக்கு எதிரான 24% அதிகரிப்பு ஒன்றான ரூபா. 6.6 பில்லியனுக்கு இந் நிதியத்தின் மொத்த முதலீடு அதிகரித்தது. 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் மூலம் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கு இணங்க நிதியத்தின் பெரும்பகுதியானது அரசாங்க ஆவணங்களில் முதலிடப்பட்டதுடன் ஏனைய மிகுதியானது மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலிடப்பட்டது. 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியிலுள்ளவாறு ரூபா. 8.7 பில்லியன் மொத்தச் சொத்து மீதியினை முன்னளிப்பதற்கு நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 21.06% இனால் வளர்ச்சி கண்டது. நிதியத்தின் மொத்தச் சொத்துக்களின் 76.83 % இனை நிதி முதலீடுகள் ஏற்படுத்துகின்றது.

# காப்புறுதித் திட்ட மீளாய்வு

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்திலிருந்து முன்நோக்கியதாக பின்வரும் நலனோம்பல் நோக்கிய காப்புறுதித் திட்டங்களானவை இலங்கையர் சமுதாயத்தின் பல்வேறுபட்ட பிரிவுகளைப் பாதுகாப்பதற்கு 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தே.கா.ந.பொ. நிதியத்தின் மூலம் உருவாக்கப்பட்டு அமுலாக்கப்பட்டன.

## i. அரசாங்க அலுவலர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம் (அக்ரஹாரா)

அரசாங்க அலுவலர்களின் நன்மைக்காக 1997 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மருத்துவக் காப்புறுதித் திட்டமே அக்ரஹாரா மருத்துவக் காப்புறுதித் திட்டம் என அறியப்படுகின்றது. மாதம் ஒன்றுக்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூபா. 11 என்ற ஆரம்பக் கொடுப்பனவு ஒன்றுடன் இது இதன் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. அதன் பின்னர் 2005 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய மாதம் ஒன்றுக்கு ரூபா. 75 கொண்ட தவணைக் கட்டணமானது இத் திட்டம் குறித்து ஓய்வூதியத்துக்குரித்துடைய சகல அரசாங்க அலுவலர்களிடமிருந்தும் மாதாந்தச் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது தனியார்மயப்படுத்தப்பட்டதான அக் காலம் வரையில் இத் திட்டமானது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால்

அமுல்படுத்தப்பட்டது. ஆனால் அதன் தனியார்மயமாக்கத்துடன் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் இத் திட்டத்தினை அரசாங்கமானது பொறுப்பேற்றுக்கொண்டதுடன் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் ஒரு தனியான அரசாங்கத் திட்டமாக அதனை அமுல்படுத்துகின்றது.

**ii. வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியம் (SRCC&TF)**

இலங்கையின் புவியியல் எல்லைக்குள் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக நிகழும் ஆதனத்துக்கான இழப்பு/ சேதம் அத்துடன் அல்லது தனிப்பட்ட சுகாதாரம், விபத்து, உடல் ரீதியான காயங்கள் என்பவற்றினை எதிர்பார்த்து பாதுகாப்பதற்கென விரிவாக்கப்பட்ட, இலங்கையில் உரிமம் பெற்ற பொதுக் காப்புறுதி நிறுவனங்களான இந் நிதியத்தின் சகல உறுப்பினர்கள் மூலமும் வழங்கப்பட்ட காப்புறுதி ஆவணங்கள் தொடர்பில் மேலதிக காப்புறுதிப் பாதுகாப்பினை வழங்கும் நோக்கத்துடன் அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றுக்கு ஏற்ப 1987 ஆம் ஆண்டில் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டிலிருந்து முன்னோக்கியதாக இந் நிதியமானது தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் நிர்வகிக்கப்பட்டுள்ளது.

2005.08.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம், தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அடுத்து பதவி வகிப்போரான வரையறுக்கப்பட்ட ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியிடமிருந்து பொறுப்பேற்று நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் இந் நிதியம்

நிர்வகிக்கப்பட்டது. அதன் பின்னர், தே.கா.ந.பொ. நிதியத்தின் இணைப்புடன் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியத்தின் வரவிலிருக்கும் சகல பணங்களும் தே.கா.ந.பொ. நிதியத்திற்குள் கொண்டு செல்லப்பட்டது.

இறுதியாக, தே.கா.ந.பொ. நிதியத்தினால் பேணப்படும் ஒரு விசேட கணக்கிற்கு இப் பணம் மாற்றப்பட்டது.

### iii. பாராளுமன்ற உறுப்பினர் காப்புறுதித் திட்டம்

தே.கா.ந.பொ. நிதியமானது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் பயன் பெறுகின்றனர். இத் திட்டமானது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பின்வரும் நன்மைகளை வழங்குகின்றது:

1. ரூபா. 5 மில்லியன் வரையிலான விபத்துக் காப்புறுதிப் பாதுகாப்பு

| | |
|---|---|
| எதிர்பாராத இறப்பு | ரூபா. 5,000,000.00 |
| விபத்துக் காரணமாக முழுமையான அங்கவீனம் | ரூபா. 5,000,000.00 |

2. வருடம் ஒன்றுக்கான மருத்துவக் காப்புறுதிப் பாதுகாப்பு ரூபா. 200,000.00

**iv. இலங்கையில் காப்புறுதித் தொழிலுக்கான மீள்-காப்புறுதிப் பாதுகாப்பு**

2006 ஆம் ஆண்டு இலங்கையில் மீள் காப்புறுதி ஆபத்தினை தே.கா.ந.பொ. நிதியமானது ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தது. தே.கா.ந.பொ. நிதியச் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க, தே.கா.ந.பொ. நிதியத்திடமிருந்து மீள் காப்புறுதி தொழிலின் மொத்தத் தொகையில் 30% இனைப் பெற்றுக்கொள்வது இலங்கையிலுள்ள பொதுக் காப்புறுதிக் கம்பனிகளுக்குக் கட்டாயமாகும்.

**v. மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டம் (அரசாங்கத்துக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களுக்காக)**

அரசாங்க நிறுவனங்களுக்கு (விருப்பத் தேர்வான) மற்றும் பகுதியளவு அரசாங்க நிறுவனங்களுக்கு (விருப்பத் தேர்வான) சொந்தமான மோட்டார் வாகனங்களுக்கு ஏதேனும் இழப்பு அல்லது சேத ஆபத்திற்கு எதிராக காப்புறுதி செய்யப்படும். தே.கா.ந.பொ. நிதியமானது ஆரம்பத்தில் அரசாங்கத் துறைக்கு மோட்டார் வாகனக் காப்புறுதியினை வழங்க ஆரம்பித்திருந்தது என்பதுடன் அதன் பின்னர் அதனை தனியார் துறைக்கு ஒரு தாங்கக்கூடிய தவணைக் கட்டணம் ஒன்றில் விரிவாக்கியது. இதன் முழுமொத்த மோட்டார் காப்புறுதியானது தீ மற்றும் களவு, மூன்றாம் தரப்புச் சேதங்கள் (மரணம் மற்றும் காயம்) அத்துடன் வெள்ளப் பெருக்கு, வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் போன்ற மேலதிக காப்பீடுகளையும் உள்ளடக்கும். தற்போது, அரசாங்கத் துறையின் காப்புறுதித் தேவைகளைப் பூர்த்திசெய்வது தொடர்பில் தே.கா.ந.பொ. நிதியமானது பிரதானமாக கவனத்தினைக் குவிக்கின்றது.

### vi "விதேச ரெக்கியா" வெளிநாட்டுத் தொழில் காப்புறுதித் திட்டம்

2008 ஆம் ஆண்டு யூன் மாதத்திலிருந்து முன்னோக்கியதாக இலங்கை வெளிநாட்டுப் புலம்பெயர் வேலையாட்களுக்கான "விதேச ரெக்கியா" வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதி ஆவணமானது தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து காப்புறுதிக் காப்பீட்டினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக இலங்கையினை விட்டுச் சென்ற 18 இலிருந்து 65 வரையான வயதிலுள்ள இலங்கையர்களை உள்ளடக்கியது. எனினும், 2012 ஆம் ஆண்டிலிருந்து இது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

### vii பொதுக் காப்புறுதித் திட்டம்

2009.08.20 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 1615/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க, பொதுக் காப்புறுதித் தொழிலின் கீழ் தீயபாயக் காப்புறுதி ஆவணங்கள், கடலபாயக் காப்புறுதி ஆவணங்கள், வேலையாட்கள் நட்டஈட்டு காப்புறுதி ஆவணங்கள் மற்றும் நானாவித காப்புறுதி ஆவணங்கள் என்பவற்றை வழங்குவதற்கு தே.கா.ந.பொ. நிதியத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### viii. பயிர்க் காப்புறுதி

"கெதட அருன பொஹர திரிய" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மானியமாக அளிக்கப்பட்ட உரத்தினைப் பெற்றுக்கொள்கின்ற விவசாயிகளுக்காக 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கு இணங்க 2013 ஆம் ஆண்டில் பயிர்க் காப்புறுதித் திட்டம் உருவாக்கப்பட்டது. வறட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டு யானைகள் என்பவற்றின் காரணமாக பயிர்ச்செய்கைக்கு ஏற்படுத்தப்படும் சேதங்களைத் தணிப்பதற்கான தீர்வு நடவடிக்கை ஒன்றாக கட்டாயக் காப்புறுதித் திட்டம் ஒன்றாக இது உள்ளதுடன் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2013/06/21 ஆம் திகதிய BD/EE/118/01/BP/2013 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய செயற்படுத்தப்படுகின்றது.

# அக்ரஹார மருத்துவக் காப்புறுதி



12/2005 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையின் மூலம் அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம் அமுல்படுத்தப்பட்டது என்பதுடன் இத் திட்டம் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தலைமைத்துவத்தின் கீழ் வந்தது. உறுப்பினர்களின் திருமணம் செய்த ஊழியர்கள், வாழ்க்கைத் துணை மற்றும் பிள்ளைகள் (அவர்கள் திருமணம் செய்யாமல், வேலையற்றோர்களாக மற்றும் 21 வயதுக்குக் குறைவாக இருந்தால் மாத்திரமே) மற்றும் திருமணம் செய்யாத ஊழியர்கள் - உறுப்பினர், பெற்றோர்கள் (பெற்றோர்கள் 70 வயதிற்குக் குறைவாக இருந்தால் மாத்திரமே) போன்றோருக்கு நன்மைகளை இது வழங்குகின்றது.

“அக்ரஹார” மருத்துவக் காப்புறுதித் திட்டமானது மாகாண அரச சேவகர்கள் உள்ளடங்கலாக அரச சேவகர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கென உருவாக்கப்பட்டுள்ளது. ஆதலினால் தே.கா.ந.பொ. நிதியமானது, அது பெற்றுக்கொள்ளும் சகல கோரிக்கைத் தொகைகளையும் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாத்தியப்படக்கூடியவாறு விரைவாக எடுத்துள்ளது.

கோரிக்கைத் தொகைக் கொடுப்பனவுச் செய்முறையினைத் துரிதப்படுத்துவதற்கான இலத்திரனியல் அட்டை முறைமையினை அமுலாக்கியதன் பின்னர் ஒரு புதிய கோரிக்கைத் தொகைச் செய்முறைப்படுத்தல் முறைமையினை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது அமுல்படுத்தியிருந்தது. சகல அவசியமான தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்த பிரகடனப்படுத்தப்பட்ட அக்ரஹார கோரிக்கைத் தொகைகளானவை இலத்திரனியல் அட்டை முறைமையினை அறிமுகப்படுத்தியதன் பின்னர் 3 வேலை நாட்களிற்குள் செலுத்தப்பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டிலிருந்து இத் திட்டத்தினை நோக்கி அரசாங்க அலுவலர்களிடமிருந்தான மாதாந்தச் சம்பளத்திலிருந்து சுற்றறிக்கை எச்சரிக்கைத் தெரிவிப்புப் பங்களிப்பிற்கேற்ப தகுதியான ஊழியர் ஒருவருக்கு ரூபா. 125 கழிக்கப்படுகின்றது. இக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் பின்வரும் நன்மை வகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

1. வைத்தியசாலை கட்டணங்களை எதிர்பார்த்து மருத்துவ நன்மைகள்:

   இந் நன்மைகளின் கீழ், வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையக் கட்டணங்கள், மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சைச் செலவுகள், மருத்துவ ஆலோசனைச் சேவைகள் அல்லது மருத்துவ நிபுணரின் மற்றும் நிபுணரின் சேவைகள், நிலையத்திற்கு உள்ளேயான சிகிச்சை போன்றவற்றுக்கான கட்டணங்கள் வழங்கப்படும்.

2. மூக்குக் கண்ணாடிகளைக் கொள்வனவு செய்தல்:

   இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு 3 வருடத்திற்கும் ஒருமுறை மூக்குக் கண்ணாடியினைக் கொள்வனவு செய்வதன் பேரிலான செலவினைப் பூர்த்திசெய்வதற்கு ரூபா. 3,500/- கொண்ட தொகை ஒன்றினைக் கோருவதற்கு அங்கத்தவர்களுக்குத் தகுதியுள்ளது.

3. இதய சத்திரசிகிச்சைச் செலவுகள் (இதயம் சார்ந்த):

   இத் திட்டத்தின் கீழ் இதயச் சத்திரசிகிச்சைக்கான கொடுப்பனவின் பேரிலான செலவினத்தைப் பூர்த்திசெய்வதற்கு ரூபா. 400,000/- கொண்ட தொகை ஒன்றினைக் கோருவதற்கு அங்கத்தவர்களுக்குத் தகுதியுள்ளது.

4. விபத்து மரண மற்றும் இயற்கை மரணக் காப்பீடு:

   இத் திட்டத்தின் கீழ், விபத்து மரண மற்றும் இயற்கை மரணக் காப்பீட்டின் கீழ் ரூபா. 600,000/- மற்றும் ரூபா. 100,000/- கொண்ட தொகை ஒன்றினைக் கோருவதற்கு அங்கத்தவர்களுக்குத் தகுதியுள்ளது.

5. “நய சுரக்கும்” கடன் உத்தரவாதத் திட்டம்:

மாதாந்தச் சம்பளத்தின் பத்து மடங்கு பெறுமதிக்கு கடன் உத்தரவாதம் ஒன்று வழங்கப்படும் என்பதுடன் ஏதேனும் நோய் அல்லது முழுமையான அல்லது பகுதியளவு இயலாமை காரணமாக கடன்படுநர் தனது வாழ்க்கையினை அல்லது வாழ்வாதாரத்தின் வழமையான வருவாயினை இழந்தவராக இருப்பின் கடனின் நிலுவைத் தொகை செலுத்தப்படும்.

**பௌதீகச் செயற்றிறன் – 2013**

**<u>அக்ரஹார உரிமைக்கோரல் வகைப்பாடு – ஆண்டு 2013 (இலக்கங்களில்)</u>**

| உரிமைக்கோரல் வகை | பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக் கோரிக்கைத் தொகைகள் | செலுத்தப்பட்ட கோரிக்கைத் தொகைகள் | நிலுவையாகவுள்ள கோரிக்கைத் தொகைகள் | நிராகரிக்கப்பட்ட கோரிக்கைத் தொகைகள் |
|---|---|---|---|---|
| இறப்பு | 2082 | 1978 | 59 | 45 |
| அங்கவீனம் | 702 | 618 | 42 | 42 |
| குழந்தைப் பேறு | 9460 | 8067 | 1117 | 276 |
| புற்றுநோய் | 346 | 303 | 23 | 20 |
| இருதய நோய் | 504 | 493 | 09 | 02 |
| மூக்குக் கண்ணாடிகள் | 60624 | 52831 | 2808 | 4985 |
| ஏனைய நோய்களுக்கான ஏனைய அரசாங்க வைத்தியசாலைக் கட்டணங்கள் | 30462 | 27162 | 2311 | 989 |
| ஏனைய | 15354 | 12262 | 1426 | 1666 |

| | | | | |
|---|---|---|---|---|
| நோய்களுக்கான ஏனைய தனியார் வைத்தியசாலைக் கட்டணங்கள் | | | | |
| சிறுநீரக நோய் | 05 | 03 | - | 2 |
| பக்கவாதம் | 07 | 04 | 01 | 02 |
| **மொத்தம்** | **119,546** | **103,721** | **7,796** | **8,029** |

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

அக்ரஹார மருத்துவத் திட்டக் கொடுப்பனவுகள் (வருடாந்தம்)

| உரிமைக் கோரல் வகை | ஆண்டு 2013 | ஆண்டு 2012 | ஆண்டு 2011 | ஆண்டு 2010 | ஆண்டு 2009 |
|---|---|---|---|---|---|
| பக்கவாதம் | 19,500.00 | 85,045.00 | 811,842.00 | 346,734.00 | 396,208.00 |
| சிறுநீரக நோய் | 170,255.00 | 442,069.00 | 2,174,098.00 | 3,924,953.00 | 396,208.00 |
| ஏனைய நோய்களுக்கான ஏனைய தனியார் வைத்தியசாலைக் கொடுப்பனவுகள் | 450,004,691.00 | 519,433,054.00 | 465,241,819.00 | 395,382,317.00 | 325,327,942.00 |
| ஏனைய நோய்களுக்கான ஏனைய அரசாங்க வைத்தியசாலைக் கொடுப்பனவுகள் | 130,537,351.00 | 135,187,766.00 | 130,001,995.00 | 124,605,768.00 | 118,388,616.00 |
| மூக்குக் கண்ணாடிகள் | 179,283,805.00 | 188,253,705.00 | 178,824,095.00 | 177,584,405.00 | 171,046,450.00 |
| இருதய நோய் | 138,154,231.00 | 133,772,302.00 | 139,890,847.00 | 121,975,896.00 | 160,377,390.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புற்றுநோய் | 6,971,447.00 | 9,809,079.00 | 13,432,312.00 | 25,034,123.00 | 18,743,792.00 |
| குழந்தைப் பேறு | 33,731,317.00 | 70,449,064.00 | 103,922,760.00 | 91,679,848.00 | 83,787,896.00 |
| அங்கவீனம் | 18,046,862.00 | 19,904,080.00 | 19,588,568.00 | 29,358,660.00 | 33,806,187.00 |
| இறப்பு | 125,596,611.00 | 119,401,850.00 | 141,684,995.00 | 175,937,244.00 | 214,492,626.00 |
| **மொத்தம்** | **1,082,516,070.00** | **1,196,843,195.00** | **1,198,363,331.00** | **1,145,706,581.00** | **1,089,933,966.00** |

# வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத விரிவாக்கம்



1987 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கேற்ப, வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் காரணமாக ஏற்படும் ஆதனங்களுக்கான இழப்பு/சேதம் அத்துடன் அல்லது தனியாள் இறப்பு/ உடற் காயங்களுக்கு எதிரான காப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு விரிவாக்கப்பட்ட, இலங்கையில் உரிமம்பெற்ற காப்புறுதி நிறுவனங்களாக உள்ள நிதியத்தின் சகல உறுப்பினர்களினாலும் வெளியிடப்பட்ட காப்புறுதி ஆவணங்கள் தொடர்பிலான மேலதிக காப்புறுதிக் காப்பீட்டினை வழங்கும் நோக்குடன் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியமானது (SR & CC) உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது.

அதன் பின்னர் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியமானது நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்குள் எடுக்கப்பட்டதுடன் 2005 ஆம் ஆண்டிலிருந்து முன்னோக்கி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் முகாமை செய்யப்பட்டது.

இறுதியாக, 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குள் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியமானது உள்ளீர்ப்புச் செய்யப்பட்டது.

வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியத்தின் உள்ளீர்ப்பின் பின்னர் அச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) ஆவது பந்திக்கேற்ப நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட சகல பணங்களும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் பேணப்படும் விசேட கணக்கு ஒன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது.

இதன் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பிலான வழிகாட்டல்களானவை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும்.

புதிய வழிகாட்டல்கள் அறிமுகப்படுத்தப்படும் வரையில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குள் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியத்தின் உள்ளீர்ப்பிற்கு முன்னர் முன்னதாகப் பின்பற்றப்பட்ட நடைமுறைகளை தே.கா.ந.பொ. நிதியமானது தொடர்ந்து பின்பற்றியது.

## வே.க.சி.ப. (SRCC & T) நிதியத்தின் பிரதான செயற்பாடுகள்

- காப்புறுதிக் கம்பனிகளுக்கூடாக தவணைக் கட்டணத்தைச் சேகரித்து இந் நிதியத்திற்கு அனுப்புதல் மற்றும் வருவாயினைப் பிறப்பிப்பதற்கு உயர் வீதத்தில் முதலீடு செய்தல்.
- தே.கா.ந.பொ. நிதியச் சபையின் அனுமதியின் பேரில் கோரிக்கைத் தொகைகள் காப்புறுதிக் கம்பனிகளால் செலுத்தப்பட்டு SRCC & T நிதியத்தினால் மீளளிக்கப்படுகின்றது.
- பயங்கரவாத தாக்குதல்களின் காரணமாக சேதமுற்ற, இலங்கை வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மென் (soft) கடன்களை முகாமை செய்தல்.

## வேலை நிறுத்தம், கலவரம் மற்றும் சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய (SRCC & T) நிதியத்தின் நோக்கங்கள்

- ❖ இந் நிதியத்தினால் காப்பீடு செய்யப்படும் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத ஆபத்துக்களை உள்ளடக்குவதற்கு விரிவாக்கப்பட்ட காப்புறுதி ஆவணங்களில் விவரிக்கப்பட்டவாறு இந் நிதியத்தின் சகல உறுப்பினர்களினாலும் பெற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதித் தவணைக் கட்டணங்களின் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத கூறு தொடர்பில் இந் நிதியத்தினை உருவாக்குதல்.

- ❖ வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் ஆதனத்துக்கான இழப்பு/ சேதம்/ அல்லது தனிப்பட்ட காயத்தினை எதிர்பார்த்து, காப்புறுதி செய்யப்பட்டும் மற்றும் புவியியல் எல்லை விரிவாக்கம் ஒன்றினை ஏற்பாடு செய்யும் அவ் வகையான பொதுக் காப்புறுதி

ஆபத்தினை உள்ளடக்கி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் புவியியல் எல்லைக்குள் அமைந்தும் உள்ள அத்தகைய ஆபத்துக்களுக்கான காப்புறுதி ஆவணங்களில் விவரிக்கப்பட்டவாறு பாதுகாப்பினை வழங்குதல்.

- ❖ கூடிய சொந்தமான இலங்கை நிதியத்திடமிருந்து காப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் பெறுமதி வாய்ந்த தவணைக் கட்டணத்தினை வெளிநாடுகளுக்குச் செல்லாமல் தடுக்க முடியும்.

## வே.க.சி.ப (SRCC & TR) அலகின் நிதி மீளாய்வு

2012 ஆம் ஆண்டில் உள்ளதற்கு எதிராக ரூபா. 262M மில்லியனால் GWP இனை அதிகரித்ததுடன் SRCC & TR அலகுக்கான குறிப்பிடத்தக்க ஒன்றாக 2013 ஆம் ஆண்டு முடிவடைந்தது. அத்துடன் முதலீட்டு வருமானம் ரூபா. 13.9 மில்லியனால் அதிகரித்துள்ளது. 2013.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு SRCC & TR அலகின் மொத்த முதலீடு ரூபா. 5.1 பில்லியனாக இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டில் திரட்டு நிதியத்திற்கு மாற்றப்பட்டது ரூபா. 2.4 பில்லியனாக இருந்தது.

2012 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா. 37 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா. 2.3 மில்லியனாக தேறிய கோரிக்கைத் தொகைகள் குறைவடைந்துள்ளது. பயங்கரவாத கோரிக்கைத் தொகைகளின் பற்றாக்குறை காரணமாகவே இது அமைந்தது. நிர்வாக மற்றும் தொழிற்பாட்டுச் செலவுகளும் 2012 ஆம் ஆண்டிற்கு எதிராக குறைவடைந்தன.

# மீள் காப்புறுதி



2006 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதிய 1528/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலுக்கிணங்க 2008 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பொது மீள்காப்புறுதி தொழிலிருந்தும் எழுகின்ற மொத்தப் பொறுப்பில் காப்புறுதி வழங்குனரால் செலுத்தப்படற்பாலதாக இருப்பதான கட்டாய 20% இனை மேற்கொள்வதற்கு மீள் காப்புறுதித் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. மேலுள்ளதற்கு மேலதிகமாக 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிய 1791/4 ஆம் இலக்க திருத்தப்பட்ட வர்த்தமானிக்கு இணங்க இவ் ஆண்டில் 20% இலிருந்து 30% வரையில் கட்டாய ஒப்பளிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அந்நியச் செலாவணியை தக்கவைத்துக் கொள்வதே இத் திணைக்களத்தினை உருவாக்கியதன் பிரதான நோக்கமாகும் அத்துடன் இலங்கையில் “தேசிய மீள்காப்புறுதி வழங்குநராக” இது பிரதானமானதும் தீர்க்கமானதுமான வகிபாகத்தினை செயற்படுத்தியுள்ளது.

சகல முதன்மையான காப்புறுதிக் கம்பனிகளும் தே.கா.ந.பொ. நிதியத்துடன் மீள்காப்புறுதி செய்யப்பட்ட தொகையின் 30% இனை கட்டாயமாக ஒப்பளிக்க வேண்டியுள்ளதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறுப்பிற்குச் சமனான தொகைக்கு ஏதேனும் முதன்மையான காப்புறுதிக் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் கோரிக்கைத் தொகையினைத் தீர்ப்பதற்கான பொறுப்பினை தே.கா.ந.பொ. நிதியம் கொண்டுள்ளது.

இவ் ஆண்டில், 17 முதன்மைக் காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து 103 உடன்படிக்கைகளை தே.கா.ந.பொ. நிதியமானது ஏற்றுக்கொண்டுள்ளதுடன் தவணைக் கட்டணமாக ரூபா. 1042 மில்லியனைச் சேகரித்துள்ளது. காப்புறுதித் தொழில்வல்லுனர்களை உள்ளடக்கிய மீள்காப்புறுதி உரிமைக்கோரிக்கை குழுவின் அனுமதியின் கீழ் உரிமைக்கோரிக்கைக் கொடுப்பனவுகளாக ரூபா. 20 மில்லியனை தே.கா.ந.பொ. நிதியம் செலுத்தியுள்ளது.

தே.கா.ந.பொ. நிதியத்துடன் தொடர்பு வைத்திருக்கும் காப்புறுதிக் கம்பனிகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. அலயன்ஸ் காப்புறுதிக் கம்பனி
2. அமானா தகாப்புல் காப்புறுதிக் கம்பனி அமானா
3. ஏசியன் அலயன்ஸ் காப்புறுதிக் கம்பனி பீஎல்சீ
4. ஏஐஏ காப்புறுதி பீஎல்சீ
5. செலின்கோ காப்புறுதி பீஎல்சீ
6. ஏஐஜீ காப்புறுதிக் கம்பனி
7. கொன்டினென்டல் காப்புறுதி லங்கா லிமிட்டெட்
8. கூட்டுறவு காப்புறுதிக் கம்பனி லிமிட்டெட்
9. எச்என்பீ அசுரன்ஸ் பீஎல்சீ
10. ஜனசக்தி காப்புறுதி பீஎல்சீ
11. எல்ஓஎல்சீ காப்புறுதிக் கம்பனி லிமிட்டெட்
12. எம்பீஎஸ்எல் காப்புறுதிக் கம்பனி லிமிட்டெட்
13. ஒரியன்ட் காப்புறுதி லிமிட்டெட்
14. பீப்பிள்ஸ் காப்புறுதி லிமிட்டெட்
15. சணச ரக்சன சமகம
16. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
17. யூனியன் அசுரன்ஸ் பீஎல்சீ

மோட்டார் வாகனக் காப்புறுதி



தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் அரச மற்றும் அரச ஆதிக்கமுடைய நிறுவனங்களால் சுமக்கக் கூடிய கட்டுப்பணத் தொகைகளின் மீது மோட்டார் வாகனங்கள் காப்புறுதி செய்யப்படுகிறது. இத்துறை துரிதமாக வளர்ச்சியடையும் ஒன்றெனக் கணிப்பிடப்பட்டுள்ளது. மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டம் தற்போது சொந்தத் தேவை மற்றும் தனி நபர்களுக்குச் சொந்தமான வாகனங்களும் உள்ளடங்கக்கூடிய விதத்தில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்புநிதியத்தின் மூலம் வழங்கப்படும் மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டத்தின் ஊடாக எந்த ஒரு வேளையிலும் அவ்வாகனத்திற்கு எதிர்நோக்க நேரிடும் அறியப்பட்ட சகல உபத்திரவங்கள் சார்பாகவும் காப்புறுதி உத்தரவாதம் அளித்து வாகன உரிமையாளர்களுக்கு உள ஆறுதலொன்று அளிக்கப்படுகிறது. உரிமைக் கோரிக்கைக் கொடுப்பனவுச் செயன்முறையைஎளிதுபடுத்தும் பொருட்டு உயர்மட்ட நிபுணத்துவம் வாய்ந்த மதிப்பீட்டாளர் குழுவொன்று நாடெங்கும் சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருப்பதுடன் ,உரிமைக் கோரிக்கைகள் முன்வைக்கப்படும் போதுகுறித்த விசாரணைகளை நடாத்தஅவர்களால் உடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**அட்டவணை -5.03:செலுத்திய மோட்டார் வாகன உரிமைக் கோரல்களின் வகைப்படுத்தல்**

| | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| | மொத்தம் | | மொத்தம் | |
| தொகுதி | உரிமைக் கோரல் எண்ணிக்கை | தொகை (ரூபா.) | உரிமைக் கோரல் எண்ணிக்கை | தொகை (ரூபா.) |
| டிரெக்டர் | 6 | 0.00 | 2 | 0.06 |
| தனிப்பட்ட கார் | 685 | 45.99 | 497 | 43.05 |
| மோட்டார் சைக்கிள் | 65 | 0.66 | 37 | 0.54 |
| மோட்டார் கோச் | 142 | 6.58 | 101 | 8.13 |
| லொறி/ காணி வாகனம் | 104 | 3.90 | 78 | 3.20 |
| இரட்டைப் பயன்பாட்டு வாகனம் | 531 | 30.95 | 372 | 23.98 |
| டிரேலர் | 1 | 0.02 | 1 | 0.01 |
| மொத்தம் | 1534 | 88.11 | **1,088** | **78.97** |

## பொதுககாப்றுதி



தேசியகாப்புறுதிநம்பிக்கைநிதியத்தின் பொதுக் காப்புறுதிவியாபாரமானதுபிரதானமாகதீகாப்புறுதி, கடல் காப்புறுதி,நானாவிதகாப்புறுதிமற்றும் மருத்துவக் காப்புறுதியாக உப பிரிவுசெய்யப்பட்டுள்ளது. 2009.08.20 அன்றுவிநியோகிக்கப்பட்ட 1615.⁚.20 ஆம் இலக்கவர்த்தமானிஅறிவித்தலுக்கமையபொதுகாப்புறுதிவியாபாரம் ஆரம்பிக்கப்பட்டதுடன் கடந்தவருடங்களின் போதுநிலையானவளர்ச்சிகண்டது.

பொதுக் காப்புறுதியின் கீழ் தேசியகாப்புறுதிநம்பிக்கைநிதியம் தீக் காப்புறுதிபத்திரங்கள், கடல் காப்புறுதிப் பத்திரங்கள்,தொழிலாளர் நட்டஈட்டுகாப்புறுதிப் பத்திரங்கள்,கொள்ளைகாப்புறுதிப் பத்திரங்கள் போன்றவற்றினைவழங்குகின்றது.

<u>பொதுக் காப்புறுதி காப்பு ஆவணங்களின் வகைப்பாடு</u>

| | | 2013 |
|---|---|---|
| **காப்பு ஆவண வகுதி** | | **காப்பு ஆவண எண்ணிக்கை** |
| தீ | | 3 |
| கடல் | | 110 |
| தனிப்பட்ட விபத்து | | 3 |
| வேலையாள் நட்டஈட்டுக் காப்புறுதி | | 2 |
| கொள்ளைகள் | | 3 |
| காசுப் பரிமாற்றம் | | 4 |
| மின்சார உபகரணம் | | 7 |
| ஒப்பந்தக்காரர் அனைத்து இடர் | | 17 |
| பொறித்தொகுதியும் இயந்திர சாதனமும் | | N/A |
| மருத்துவம் | | 15 |
| பிரயாணம் | | 9 |
| **மொத்தம்** | | **173** |

# பயிர்க் காப்புறுதி



“கெதட அருன பொஹர திரிய” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மானியமாக அளிக்கப்பட்ட உரத்தினைப் பெற்றுக்கொள்கின்ற விவசாயிகளுக்காக 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கு இணங்க 2013 ஆம் ஆண்டில் பயிர்க் காப்புறுதித் திட்டம் உருவாக்கப்பட்டது. வறட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டு யானைகள் என்பவற்றின் காரணமாக பயிர்ச்செய்கைக்கு ஏற்படுத்தப்படும் சேதங்களைத் தணிப்பதற்கான தீர்வு நடவடிக்கை ஒன்றாக கட்டாயக் காப்புறுதித் திட்டம் ஒன்றாக இது உள்ளதுடன் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2013/06/21 ஆம் திகதிய BD/EE/118/01/BP/2013 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய செயற்படுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு பயிர்ச்செய்கைப் பருவகாலத்தின் போதும் தவணைக் கட்டணம் ஒன்றாக ஒவ்வொரு 50 கி.கி (kg) கொண்ட இரசாயன உரப் பையினதும் கொள்வனவுக் காலத்தில் ரூபா. 150/= இனை (1 kg உரத்திற்கு ரூபா. 3/- படி) விவசாயிகள் பங்களிப்புச் செய்வர். மானியமாக அளிக்கப்படும் உரத்தினை விற்பனைசெய்து வரும் கமநல சேவை நிலையங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றில் உரத்தினைக் கொள்வனவு செய்யும் வேளையில் காப்புறுதித் தவணைக் கட்டணம் அறவிடப்படுகின்றது.

மேலும், அதே நோக்கத்திற்காக பாவிக்கப்படுவதற்கு சகல உரிமம்பெற்ற வங்கிகள், பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் நிதிக் கம்பனிகள்

ஆகியவற்றிலிருந்து தே.கா.ந.பொ. நிதியத்தினால் வருடாந்த இலாபத்தின் பயிர்க் காப்புறுதி விதிப்பனவு ஒன்றும் சேகரிக்கப்படுகின்றது.

மொத்த நட்டம் ஒன்று ஏற்படுங்கால் ஹெக்டெயர் ஒன்றுக்கு ரூபா. 25,000/- (ஏக்கர் ஒன்றுக்கு ரூபா. 10,000/-) கொண்ட ஆகக்கூடிய எல்லைக்கு உட்பட்டு காப்புறுதி நன்மை செலுத்தப்படுகின்றது. பயிர்ச்செய்கை நட்ட மதிப்பீட்டுக் குழுவானது பயிர்ச்செய்கைக் கட்டத்தின் அடிப்படையில் சேதங்களை மதிப்பிட வேண்டும். கமநல அபிவிருத்தி நிலையங்களிலிருந்து தே.கா.ந.பொ. நிதியத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட உரிமைக்கோரிக்கைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், உரிமைக்கோரிக்கைகள் செய்முறைப்படுத்தப்பட்டு கொடுப்பனவுகள் நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வரவு வைக்கப்படும்.



# 6. நிலைத்து நிற்கும் தன்மையினை அறிக்கையிடல்

கூட்டுப் பிரசாவுரிமை, சமூகப் பொறுப்பு, காலநிலை மாற்ற முன்னெடுப்புக்கள், அல்லது "பசுமை" இயக்கம் என்னும் வேறுபட்ட பெயர்கள் மூலமான நிலைத்துநிற்கும் தன்மையினை மக்கள் மற்றும் கம்பனிகள் என்பன குறித்துநிற்கின்றன. அடிப்படையில், பச்சைவீட்டு வாயு (gas) விடுவிப்புத் தரவுகளை சேகரித்து, அளவிட்டு மற்றும் அறிக்கையிடுவதற்கும், இயற்கை வளங்களினதும் எரிசக்தியினதும் தொழிற்பாட்டுப் பாவனையினைக் குறைப்பதற்கு கம்பனி வியாபாரச் செய்முறைகளை மாற்றியமைப்பதற்குமென சுற்றாடல் விழிப்புணர்விலிருந்தான ஏதாவதொன்று மற்றும் உள்ளூர் சமுதாயப் பிரச்சினைகளின் உள்ளடக்கம் என்பவற்றை நிலைத்துநிற்கும் தன்மை உள்ளடக்குகின்றது.

அக்கறைதாரர் (முதலீட்டாளர்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள், மற்றும் சமூகம்) மற்றும் மூலதனச் சந்தைகள் ஆகியன நிதிசாரா நிலைத்துநிற்கும் தன்மைத் தரவுகளின் சிறந்த, கூடுதல் வெளிப்படைத் தன்மையான தொடர்பாடலினை மென்மேலும் கோருகின்றன. நிறுவனம் ஒன்றின் பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமூகத் தாக்கத்தினைப் பற்றிய தகவல்களைப் பரிமாற்றும், கூட்டு சமூகப் பொறுப்பு (CSR), சுற்றாடல் சமூக ஆட்சி (ESG), மூன்று அடித்தள வரிசை (TBL) அறிக்கைகள் என்றும் அழைக்கப்படும், நிலைத்துநிற்கும் தன்மை அறிக்கைகளானவை நிதி அறிக்கைகளுடன் இணைந்து மென்மேலும் வெளியிடப்பட்டு வருவதுடன் கம்பனி ஒன்றின் நீண்டகால சாத்தியப்பாட்டுத் தன்மையினை மதிப்பிடுவதில் கூடுதலாக அவற்றை அக்கறைதாரர் பயன்படுத்தி வருகின்றனர்.

கம்பனிகள் தமது முக்கிய வியாபாரத் தந்திரோபாயங்களுக்குள் நிலைத்துநிற்கும் தன்மையினை இணைப்பதனால் உரியகால மற்றும் துல்லியமான நிலைத்துநிற்கும் தன்மை தொடர்புபட்ட அளவீட்டு முறைகளின் முக்கியத்துவம் அதிகரிக்கின்றது. சிரேஸ்ட முகாமைக்கு, அவர்கள்

கூடுதலான நிதித் தரவுகளைக் கொண்டிருப்பதனால் இவ் அளவீட்டு முறைகளின் மீது ஒரே கட்டுப்பாட்டு மட்டம் தேவைப்படுவதுடன் அதனை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். இருப்பினும், பல சந்தர்ப்பங்களில் அத்தகைய கட்டுப்பாடு அங்கிருப்பதில்லை. நிறுவனம் ஒன்றின் செய்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் தரவுகள் என்பவற்றின், உள்ளக அல்லது வெளியக பாவனைக்கோ ஆன சுயாதீன உறுதியளிப்பானது கம்பனியினது நிலைத்துநிற்கும் தன்மைத் தரவுகளானவை நம்பகரமானதும் துல்லியமானதுமாக உள்ளன என்பதை உறுதியளிக்க உதவுகின்றது ஆதலால் தீர்மானமெடுத்தல், நட்டஈடு, மற்றும் வெளியக அறிக்கையிடல் என்பவற்றில் பாவிக்கப்படும் தகவல்களின் நம்பகத் தன்மைக்கு உதவுகின்றது.

**அக்கறைகொண்ட தரப்பினர் குழு 1 – அரசாங்கம்**

தே.கா.ந.பொ. நிதியமானது 2012 ஆம் ஆண்டில் ரூபா. 4.2 மில்லியன் கொண்ட எப்போதுமே மிக உயர்வான தொகையினை வழங்கியதன் மூலம் திரட்டு நிதியத்துக்கு அதன் வருடாந்தப் பங்களிப்பினை அதிகரித்தது அத்துடன் 2013 ஆம் ஆண்டிலும் ரூபா. 3.2 மில்லியன் கொண்ட வருடாந்தப் பங்களிப்பு ஒன்றினை இது ஏற்படுத்தியுள்ளது. கடந்த காலத்தில், தே.கா.ந.பொ. நிதியமானது 2010 ஆம் ஆண்டில் ரூபா. 2,000 மில்லியனையும், 2009 ஆம் ஆண்டில் ரூபா. 2,250 மில்லியனையும், 2008 ஆம் ஆண்டில் ரூபா. 1,000 மில்லியனையும் பங்களிப்புச் செய்துள்ளது.

அட்டவணை – 6.01: திரட்டு நிதியத்துக்கான பங்களிப்பு

| பாதீட்டு ஆண்டு | ரூபா. மில்லியன் |
|---|---|
| 2006 | 4,000 |
| 2007 | - |
| 2008 | 1,000 |
| 2009 | 2,250 |
| 2010 | 2,000 |
| 2011 | 3,495 |
| 2012 | 4,200 |
| 2013 | 3,200 |

**அக்கறைகொண்ட தரப்பினர் குழு 2 – வாடிக்கையாளர்**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு காப்புறுதித் திட்டத்தின் கீழ், 2012 ஆம் ஆண்டின் ஆரம்ப மாத காலப்பகுதியில் மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றிவரும் இலங்கை வீட்டுப் பணிப்பெண்களுக்காக காப்புறுதிக் காப்பீடுகளை தே.கா.ந.பொ. நிதியமானது வழங்கியுள்ளது. தே.கா.ந.பொ. நிதியமானது 2012 ஆம் ஆண்டின் தொடக்க மாதங்களின் பின்னர் காப்புறுதி ஆவணங்கள் வழங்குவதை இரத்துச் செய்துள்ள போதிலும் பல்வேறுபட்ட பேரழிவுகள் மற்றும் விபத்துக்கள் என்பவற்றுக்கு உட்பட்டுள்ள இலங்கையின் புலம்பெயர் ஊழியர்களிற்காகவும் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டுத் தொழில் தொடர்புற்ற காப்புறுதி உரிமைக் கோரல்களை தே.கா.ந.பொ. நிதியமானது தொடர்ந்து செலுத்தியுள்ளது.

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சலுகை அடிப்படை ஒன்றில் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தினையும் தே.கா.ந.பொ. நிதியமானது நடைமுறைப்படுத்தி வருவதுடன் அரசாங்க ஊழியர்களுக்கான பெருமளவு உரிமைக்கோரிக்கைத் தொகைகளையும் செலுத்தியுள்ளது.

**அக்கறைகொண்ட தரப்பினர் குழு 3 – சமூகம்**

தயட்ட கிருல கண்காட்சி – 2013 இன் போது, தே.கா.ந.பொ. நிதியமானது தயட்ட கிருல கண்காட்சி – 2013 இற்காக தனிப்பட்ட விபத்துக் காப்பீட்டு பாதுகாப்பினை வழங்கியுள்ளது.

**அக்கறைகொண்ட தரப்பினர் குழு 4 – ஊழியர்கள்**

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஊழியரிடல், வசதிகள், உட்கட்டமைப்பு என்பவற்றை வலுப்படுத்துவதற்கு தேவைப்படும் உதவி மற்றும் முகாமையின் அடிப்படைத் தேவைகளை விளைதிறனாகப் பூர்த்திசெய்வதற்கான ஒருங்கிணைப்பு உதவி என்பவற்றை மனித வள (HR) மற்றும் நிர்வாகத் திணைக்களம் வழங்குகின்றது. பௌதீக உட்கட்டமைப்பு மற்றும் அலுவலகத்தில் மனித வளங்களின் விளைதிறனான பாவனை என்பவற்றின் மீது அதிக கவனம் செலுத்தப்படுகின்றது.

அதேபோல 2013 ஆம் ஆண்டிலும் நிறுவன இலக்குகளை அடைந்துகொள்வதை நோக்கி நாம் பணியாற்றியுள்ளோம்.

எமது நிறுவனத்திலுள்ள ஒரு பிரதான அக்கறைதாரர் ஊழியர்கள் ஆவர். தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வெற்றியானது எமது ஊழியர்களின் செயற்றிறனில் தங்கியுள்ளது. குறைவான செயற்றிறனானது தே.கா.ந.பொ. நிதியத்தின் வெற்றிக்குப் பாதகமாகும். உங்களின் தொழிற்படையினை முகாமைசெய்து பயிற்றுவிப்பதற்கான முழுமையாக விருத்தியடைந்த (well-rounded) அணுகுமுறை ஒன்றினை உருவாக்குதலுக்கு சிறந்த தலைமைத்துவம் ஒன்றின் நிபுணத்துவம் மற்றும் நடைமுறைச் சாத்தியம் என்பனவும் மனித வள திணைக்களத்தின் அளப்பரிய உதவியும் தேவைப்படுகின்றது. சந்தையில் மேம்பாடு காண்பதற்கான போட்டிசார் வினைத்திறனாக கல்விகற்ற ஊழியர்களின் ஆற்றலினை நாம் இனங்கண்டுள்ளோம். ஆதலினால், பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், நலனோம்பல் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றுக்கூடாக அலுவலர் குழாத்தின் மீது நாம் முதலீட்டினை ஈடுபடுத்தினோம்.

2010 – 2013 ஆம் ஆண்டு வரையான அலுவலர் குழாத்தின் நலனோம்பல் செலவினம் (ரூபா)

| | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|
| | 935,912 | 1,438,399 | 1,944,808 | 957,411 |

அத்துடன் தொழிற்படையின் குழு உணர்வு மற்றும் ஒற்றுமை என்பவற்றை மேம்படுத்தும் நோக்குடன் பெலவத்தையிலுள்ள புத்ததாச

மைதானத்தில் 2013 ஆம் ஆண்டுக்கான "வருடாந்த பக் மஹ உலெல" இனை நாம் நடாத்தினோம்.

அத்துடன், வழமை போல ஜனவரி 01 ஆம் திகதி எம் மீதும் அதேபோல எமது நிறுவனத்தின் மீதும் ஆசீர்வாதத்தினை வேண்டி புத்த பிக்கு ஒருவர் மேற்கொண்ட சொற்பொழிவினைச் செவிமடுத்த பின்னர் நாம் புது வருடத்தினை ஆரம்பித்தோம்.



"ரன்ரம்பே" என்னும் இடத்தில் 2013 ஆம் ஆண்டு வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை நாம் ஒழுங்குபடுத்தினோம். குழு உணர்வு மற்றும் மனோநிலை அபிவிருத்தி என்பன தொடர்பில் அதிகளவானவற்றை ஊழியர்கள் கற்றுக்கொண்ட 03 நாள் வெளியிணைந்த நிகழ்ச்சித் திட்டம் ஒன்றாக இது இருந்தது.





# 7. ஆட்சி அறிக்கையிடல் – தொழில்முயற்சி ஆட்சி

## அறிமுகம்

ஒத்திசைவு மற்றும் செயற்றிறன் என்பதான கூட்டுரிமை ஆட்சியின் இரு பரிமாணங்களை தொழில்முயற்சி ஆட்சி உள்ளடக்குகின்றது. சபைக் கட்டமைப்புக்கள் மற்றும் வகிபாகங்கள், மற்றும் நிறைவேற்று ஊதியம் என்பவற்றை ஒத்திசைவு உள்ளடக்குகின்றது. உறுதியளிப்பு மற்றும் கணக்காய்வு, செயற்றிறன் மேற்பார்வை என்பவற்றுக்குட்பட்ட ஒத்திசைவுடன் இப் பிரிவில் விதிக்கோவைகள் அத்துடன்/ அல்லது வழிகாட்டல்களினால் பொதுவாக உதவ முடியும் அதேவேளை தந்திரோபாயம் மற்றும் மதிப்பு உருவாக்கம் ஆகியவற்றினையும் மையப்படுத்துகின்றது. ஒரு சபையானது ஆபத்துக்கான அதன் நாட்டம் மற்றும் செயற்றிறனின் அடிப்படைச் செலுத்திகள் என்பவற்றைப் புரிந்துகொள்ளும் அதேவேளை தந்திரோபாயமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது. ஒரு நியம முறைமை மற்றும் கணக்காய்வு என்பவற்றுடன் இலகுவில் இது பொருந்தாது. ஆதலினால் வேறுபட்ட நிறுவன வகைகளில் புத்திசாதுர்யமாக பிரயோகிக்கப்படக்கூடிய சிறந்த நடைமுறைக் கருவிகள் மற்றும் நுட்பங்களின் வீச்சு ஒன்றினை விருத்திசெய்தல் விரும்பத்தக்கது. யு.எஸ் (US) இல் ஏன்ரன் மற்றும் வேள்ட்கொம் என்பவற்றினதும் யு.கே (UK) இல் மார்க்கோனியினதும் தோல்விப் பின்னணிக்கு எதிரான முக்கியமான நடைமுறை ஒன்றாக தொழில்முயற்சி ஆட்சி மாறியது. இந் நிறுவனங்களில் கூடுதலான பங்குதாரர் மதிப்பு இழக்கப்பட்டது. இத் தோல்விகளானவை மேற்கில் கூட்டுரிமை உலகில் நம்பிக்கையினைச் சிதைத்தது அத்துடன் எதிர்காலத்தில் எவ்வாறு அத்தகைய சம்பவங்கள் தடுக்கப்பட முடியும் என்பது பற்றிய புரிந்துணர்வில் அதிக முயற்சி எடுக்கப்பட்டது.

ஒழுக்கம், வெளிப்படைத்தன்மை, சுதந்திரம், பொறுப்புக்கூறுதல், நீதி மற்றும் சமூகப் பொறுப்பு போன்ற முக்கியமான கூட்டுரிமை ஆட்சிப் பெறுமானங்களை பின்பற்றும் அதேவேளை தொழிற்பாட்டு விளைதிறன், வினைத்திறன் மற்றும் சிக்கனம் என்பவற்றை இறுதியில் மேம்படுத்தும், வர்த்தக மதிப்பினை அதிகரிக்கும் அத்துடன்

பொதுமக்கள் நம்பிக்கையினைப் பேணும் ஒரு சிறந்த கட்டுப்பாட்டுச் சூழலின் முக்கியமான வெற்றிதரும் காரணியாக வலுவான கூட்டுறவு ஆட்சியின் முக்கியத்துவத்தை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தந்திரோபாய உச்ச மட்டம் இனங்கண்டுள்ளது.

2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் உருவாக்கப்பட்டதிலிருந்து இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மூலம் வெளியிடப்படும் கூட்டுரிமை ஆட்சி நன் நடைமுறைக் கோவை மற்றும் நல்லாட்சி மற்றும் கூட்டுரிமை ஆட்சி நடைமுறைகளுக்கான அரச தொழில்முயற்சி வழிகாட்டல்கள் என்பவற்றின் உரிய துறைகளின் மீது உரிய கவனத்தினை செலுத்தி அதன் கூட்டுரிமை ஆட்சி நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

தே.கா.ந.பொ. நிதியத்தின் ஆட்சி நடைமுறைகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றது;

- சரியான தந்திரோபாயத் திசையில் தொழில் கொண்டுசெல்லப்படுகின்றது,
- பதவிநிலை அலுவலர்கள் உரிய அலகுகளை விளைதிறனாக வழிநடாத்தி முகாமை செய்வதுடன் பொறுப்புக்கூறக்கூடியவர்களாக உள்ளனர்,
- தே.கா.ந.பொ. நிதியமானது உரிய ஒழுங்கில் பொருத்தமான கட்டுப்பாடுகளை கொண்டிருப்பதுடன் ஆபத்துக்கள் ஒழுங்காக கண்காணிக்கப்பட்டு முகாமை செய்யப்படுகின்றது, அத்துடன்
- அக்கறைதாரர் அனைவரினதும் நன்மைக்காக எல்லா வேளையிலும் ஊழியர்கள் “சரியான விடயத்தினைச் செய்கின்றனர்”.

### நிர்வாகக் கைந்நூல்

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் அரச தொழில்முயற்சித் திணைக்களம் ஆகியவற்றினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளில் உரிய அக்கறை எடுத்து தே.கா.ந.பொ. நிதியத்திற்கான நிர்வாகக்

கைந்நூல் ஒன்றை விருத்தி செய்வதற்கு முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டன.

### நிதி மற்றும் காப்புறுதி நுட்பத்திறன்

சிரேஷ்ட முகாமைக்கான வியாபார நடத்தை மற்றும் ஒழுக்க விதிக்கோவையானது தே.கா.ந.பொ. நிதியத்தினால் பின்பற்றப்படுகின்றது.

- அக்கறை முரண்பாட்டினைத் தவிர்த்தல்
- தே.கா.ந.பொ. நிதியத்தின் சொத்துக்களை பாதுகாத்தலும் அவற்றின் முறையான பாவனையும்
-ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் கணக்காய்வாளர்களுடன் தொடர்புகொள்தல்
-ஒழுக்கமான வியாபார நியமங்கள் மற்றும் மோசடியான நடத்தை
-பாராபட்சமின்மை

போன்ற பிரிவுகளை இவ் விதிக்கோவை எடுத்துரைக்கின்றது.

### நிதி மற்றும் காப்புறுதி நுட்பத்திறன்

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி மற்றும் காப்புறுதி ஆற்றலானது பணிப்பாளர் சபை மற்றும் தவிசாளரின் மூலம் வலுப்படுத்தப்பட்டது.

### தே.கா.ந.பொ. நிதிய சபை

2006 ஆம் ஆண்டின் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்திற்கமைய, அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அலுவலர், நிதி அமைச்சின் பிரதம கணக்காளர், சுகாதார அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அலுவலர், அரசாங்க நிர்வாக அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அலுவலர், இலங்கை காப்புறுதிச் சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிதி, வங்கியில், காப்புறுதி, முகாமைத்துவம் மற்றும் சட்டம் ஆகிய துறைகளில் நிபுணத்துவத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஏனைய மூன்று ஆட்கள் ஆகியோரை உள்ளடக்கி நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் எட்டு உறுப்பினர்களைக் கொண்ட சபை ஒன்றின் மூலம் தே.கா.ந.பொ. நிதியமானது நெறிப்படுத்தப்பட்டு முகாமை

செய்யப்படுகின்றது. சபையின் ஆள் ஒருவரை தவிசாளராக நியமிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. சட்டத்திற்கேற்ப, சபையின் சகல உறுப்பினர்களும் நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருட காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும். பணிப்பாளர் சபையின் பெயர்கள் பக்கம் 10 இல் தரப்பட்டுள்ளன.

### தகவல் வழங்கல்

சபைக் கூட்டங்களிற்கு முன்பாகவே உரியகால, துல்லியமான, பொருத்தமான மற்றும் முழுமையான தகவல் தொகுதி ஒன்று பணிப்பாளர் சபைக்கு வழங்கப்படுவதை சிரேஷ்ட முகாமை உறுதிசெய்யும். இக் காலப்பகுதிக்கான சகல நிதிசார் மற்றும் நிதிசாரா தகவல்களும் இப் பகுப்பாய்வுகளில் உள்ளடக்கப்படும். சபைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கென மாதாந்த அடிப்படையில் தவிசாளர் மற்றும் சபை கூடுகின்றது. 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சபையானது 15 சபைக் கூட்டங்களைக் கொண்டிருந்தது. தடவைகள் சபை கூடியது. 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில், கணக்காய்வுக் குழுவானது 9 கூட்டங்களைக் கொண்டிருந்தது.

### நிதிக் கூற்றுக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அதேபோல IBSL ஒழுங்குவிதிகள் என்பனவற்றுக்கு ஒத்திசைவாக தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது அதன் நிதிக் கூற்றுக்களை அளித்தது. மதிநுட்பமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அக்கறைகொண்ட தரப்பினருக்கு ஒரு விரிவான மற்றும் வெளிப்படையான செயற்றிறன் பகுப்பாய்வு மற்றும் எதிர்கால தந்திரோபாயங்கள் என்பவற்றை தே.கா.ந.பொ. நிதியமானது வழங்குகின்றது.

### ஆண்டறிக்கை 2013

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தே.கா.ந.பொ. நிதிய அலுவல்களின் ஓர் ஒட்டுமொத்த பார்வையினை, அதன் பொறுப்புக்கூறல் செய்முறையின் அடிப்படைக் கூறு ஒன்றாக மதிப்பிடுவதற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வருடாந்த அறிக்கை 2013 தயாரிக்கப்பட்டுள்ளது.

### பெறுகை

தே.பெ.மு. (NPA) வழிகாட்டல்களின் அடிப்படையில் தே.கா.ந.பொ. நிதியமானது அதன் பெறுகைகளை மேற்கொள்கின்றது. சிற்றளவிலான பெறுகைகளில், கேள்வி வழிகாட்டல்கள் பின்பற்றப்படுகின்றது. மீள்காப்புறுதிச் சேவைகளின் பெறுகை போன்ற பேரளவான பெறுகைகளில், அது CAPC (அமைச்சரவை நியமிப்புப் பெறுகைக் குழு) மற்றும் MPC (அமைச்சு நியமிப்புப் பெறுகைக் குழு) என்பவற்றினால் செய்யப்படுகின்றது.

### உள்ளகக் கட்டுப்பாடு

உள்ளகக் கணக்காய்வு மற்றும் வெளியக கணக்காய்வுத் திட்டங்கள் மற்றும் நோக்கெல்லை தொடர்பில் மீளாய்வுசெய்தல் மற்றும் உடன்படல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் மீளாய்வு மற்றும் அவசியமானவிடத்து கலந்துரையாடல் மற்றும் பிரச்சினைகளைக் கருத்திற்கொள்தல் மற்றும் முகாமை செய்தல், தே.கா.ந.பொ. நிதியத்தின் இடர் முகாமைத்துவத் தந்திரோபாயத்தினை மீளாய்வுசெய்தல் மற்றும் இடரினைத் தணிப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடல் மற்றும் உடன்படல், சகல நேரத்திலும் உள்ளக/ வெளியக கணக்காய்வாளர்களுடன் விளைதிறன் வாய்ந்த உறவினைப் பேணுதல், அவசியமானவிடத்து தே.கா.ந.பொ. நிதியத்துடன் தொடர்புடைய விடயங்களை கலந்துரையாடுவதற்கு உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வாளர்களைத் தனித்தனியாகச் சந்தித்தல் போன்ற பல்வேறுபட்ட பொறிமுறைகளுக்கூடாக நிதிசார்ந்த மற்றும் நிதிசாராத கட்டுப்பாட்டு முறைமைகளினை கணக்காய்வுக் குழுவானது உன்னிப்பாக அவதானிக்கும்.

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளியகக் கணக்காய்வானது கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் செய்யப்பட்டது. 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திணைக்கள உள்ளகக் கணக்காய்வு மற்றும் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் தொடர்பான நிதியத்தின் கணக்காய்வு என்பன உள்ளங்கலாக உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளானவை உள்ளகக்

கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கணக்காய்வுக் குழு**

2013 மற்றும் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில், கீழ்க் குறிப்பிட்ட கணக்காய்வு நோக்கெல்லையினை கணக்காய்வுக் குழுவானது உருவாக்கி தொடர்ந்து பின்பற்றி வந்தது.

1. உள்ளகக் கணக்காய்வு அலகின் பொறுப்புக்களை வரையறுத்தல் மற்றும் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்வுசெய்தல்.
2. நிறுவனத்தின் சகல செயற்பாடுகளிற்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுதல்.
3. கிரய வினைத்திறனிற்காகவும் விரய செலவினம் போன்றவற்றை இல்லாமற் செய்வதற்கும் ஒழுங்கான இடைவெளிகளில் செயற்றிறனை மீளாய்வு செய்தல்.
4. வெளியகக் கணக்காய்வாளருடன் தொடர்புகொள்தல் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின்/ வெளியகக் கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதங்களைத் தொடர்தல்.
5. நியதிச் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பன இயைந்தொழுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தல்.
6. கணக்கீட்டு நியமங்களுடனான ஒத்திசைவினை உறுதிப்படுத்துவதற்கு நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.
7. உள்ளகக் கணக்காய்வு/ வெளியகக் கணக்காய்வு அறிக்கைகள், தீர்வு நடவடிக்கைகான முகாமைத்துவக் கடிதம் என்பவற்றை மீளாய்வு செய்தல்.
8. அரச தொழில்முயற்சிக் குழுவின் பரிந்துரை/ அறிவுறுத்தல்களின் அமுலாக்கத்தினை மீளாய்வு செய்தல்.

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கணக்காய்வுக் குழு 9 தடவைகள் கூடியது. சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடனான ஒத்திசைவு, நிதி அறிக்கையிடல், வெளியகக் கணக்காய்வு, ஒத்திசைவு மற்றும் வழக்கு, இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடு

மற்றும் உள்ளகக் கணக்காய்வு என்பவற்றை மையப்படுத்திய காப்புறுதித் திட்டங்களின் விளைதிறனை முகாமைசெய்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றை உறுதி செய்வதற்கு கணக்காய்வுக் குழுவானது நடைமுறைகளை நிறைவேற்றியுள்ளது.

## 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூட்டுரிமை ஆட்சி ஒத்திசைவு

| கூட்டுரிமை ஆட்சி தத்துவம் | தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலமான ஒத்திசைவு மட்டம் |
|---|---|
| தவிசாளர் மற்றும் பி.நி.அ. (CEO) | பி.நி.அ. இன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு தவிசாளரிடம் அதிகாரத்தினை சபையானது கையளித்துள்ளது. |
| பொறுப்புக்களின் பிரித்தல் | தவிசாளரானவர் சபையின் தலைமைத்துவத்திற்குப் பொறுப்புடையவராவார். குறிப்பாக, அவர் மூலம் பின்வருவனவற்றை ஆற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது:<br>• உயர்ந்தபட்ச கூட்டுரிமை ஆட்சி நியமங்களுடன் ஒத்திசைவாக சபையினதும் அதன் குழுக்களினதும் விளைதிறனான நடவடிக்கையினை உறுதிப்படுத்தல்.<br>• தந்திரோபாய விருத்தியில் சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கு உதவுதல், மற்றும் கூடுதல் பரந்துபட்ட ரீதியில் சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கு உதவுதலும் ஆலோசனை வழங்குதலும். திணைக்களத் தலைவர்கள் ஒவ்வொரு பிரிவினதும் தலைமைத்துவத்திற்குப் பொறுப்பாகவிருப்பர் என்பதுடன் சபையினால் கையளிக்கப்படும் அதிகாரங்களுக்குள் அதனை முகாமை செய்வர்,<br>• சபைக்குப் பரிந்துரைப்பதற்கான தந்திரோபாய முன்மொழிவுகளை விருத்தி செய்தல் மற்றும் உடன்பட்ட தந்திரோபாயங்களானவை வியாபாரத்தில் பிரதிபலிக்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்தல். |

| | |
|---|---|
| | • ஆதரவுக்காக சபையிடம் அளிப்பதற்காக உடன்பட்ட தந்திரோபாயங்களுடன் நிலைத்திருக்கும் வருடாந்த திட்டங்களை விருத்தி செய்தல்,<br>• நிறுவனமானது அதன் திட்டங்களை அடைந்துகொள்வதற்கு தேவையான ஆற்றலினையும் வளத்தினையும் கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கான மனித வளமிடலைத் திட்டமிடுதல்.<br>• வினைத்திறனான வள ஒழுங்கமைப்பினை உறுதிப்படுத்துவதற்கு நிறுவனக் கட்டமைப்புக்களை விருத்தி செய்தலும் அமுல்படுத்தலும் மற்றும் செய்முறைகளையும் முறைமைகளையும் உருவாக்குதல்.<br>• உடன்பட்ட திட்டங்கள், தந்திரோபாயங்கள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்க வியாபாரச் செயற்றிறனிற்காக சபைக்குப் பொறுப்பாக இருத்தல்.<br>• செயற்றிறன் தொடர்பு விருத்தி மற்றும் மதிப்பீடுகள் உள்ளடங்கலாக நிறைவேற்றுக் குழுவினை வழிநடாத்துதல்.<br>• முதலீட்டு வருவாய்களை மேற்பார்வை செய்தல். |
| பெறுகைக் குழுக்கள் | திணைக்கள மட்டத்தில் உருவாக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு எதுவுமில்லை. பெறுகைப் பெறுமதியின் அடிப்படையில் சிறிய அல்லது பாரிய பெறுகைக் குழுக்கள் விடயத்துக்கு விடயம் என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளன. |
| கணக்காய்வுக் குழு | கணக்காய்வுக் குழுவானது மூன்று நிறைவேற்று அதிகாரமல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது. கணக்காய்வுக் குழுவானது, அது பொறுப்பினைக் கொண்டிருக்கும் நிதி மற்றும் நிர்வாகத்தில் ஒரு முக்கியமான வகிபாகத்தினை வகிக்கின்றது. கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்திலிருந்தான சிரேஸ்ட அலுவலர் ஒருவர் குழுக் கூட்டங்களிற்கு அவதானிப்பாளர் ஒருவராக பங்குபற்றுவார்.<br>• **கணக்காய்வுக் குழு**<br>2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கணக்காய்வுக் குழுவானது பின்வரும் |

| | |
|---|---|
| | கணக்காய்வு நோக்கெல்லையினை உருவாக்கியது.<br><br>1. உள்ளக கணக்காய்வு அலகின் பொறுப்புக்களை வரையறுத்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்வு செய்தல்.<br>2. நிறுவனத்தின் சகல செயற்பாடுகளிற்காகவும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்தலும் மதிப்பிடுதலும்.<br>3. செலவு விளைதிறனுக்காக ஒழுங்கான இடைவெளியில் செயற்றிறனை மீளாய்வு செய்தல் மற்றும் விரய செலவினம் போன்றவற்றை நீக்குதல்.<br>4. வெளியக கணக்காய்வாளருடன் தொடர்புகொள்தல் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தினது/ வெளியக கணக்காய்வாளரது முகாமைத்துவக் கடிதங்களைப் பின்பற்றுதல்.<br>5. நியதிச் சட்டங்கள், ஒழுங்கு விதிகள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பவற்றுடன் இயைந்தொழுகின்றதா என்பதை உறுதிப்படுத்தல்.<br>6. கணக்கீட்டு நியமங்களுடனான ஒத்திசைவினை உறுதிப்படுத்துவதற்கு நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.<br>7. உள்ளக கணக்காய்வு/ வெளியகக் கணக்காய்வு அறிக்கைகள், தீர்வு நடவடிக்கைக்கான முகாமைத்துவக் கடிதம் என்பவற்றை மீளாய்வு செய்தல்.<br>8. அரச தொழில்முயற்சிகள் குழுவினது பரிந்துரை/ வழிகாட்டல்களின் அமுலாக்கத்தினை மீளாய்வு செய்தல்.<br>2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கணக்காய்வுக் குழு 9 தடவைகள் கூடியது. சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடனான ஒத்திசைவு மற்றும், நிதி அறிக்கையிடல், வெளியகக் கணக்காய்வு, ஒத்திசைவு மற்றும் வழக்கு, இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் உள்ளகக் கணக்காய்வு என்பவற்றை மையப்படுத்திய காப்புறுதித் திட்டங்களின் விளைதிறனை முகாமைசெய்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றை உறுதி செய்வதற்கு கணக்காய்வுக் குழுவானது நடைமுறைகளை நிறைவேற்றியுள்ளது. |

| | |
|---|---|
| சபைக் கூட்டங்கள் | 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 15 சபைக் கூட்டங்கள் இடம்பெற்றதுடன் கூட்டத்தில் மிகச் சிறப்பான வரவுப் பதிவுகளை சபை உறுப்பினர்கள் பேணியிருந்தனர். சபைக் கூட்டங்களில் கலந்துகொண்ட சபை உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு தரப்பட்டுள்ளது; |

| | நியமனத் திகதி | கலந்துகொண்ட கூட்டங்களின் எண். |
|---|---|---|
| திரு. டி. விதானகமாச்சி<br>தவிசாளர் | 09.10.2012 | 15 |
| கலாநிதி. எல். சமரவிக்ரம<br>சபை உறுப்பினர் | 11.06.2010 | 15 |
| திரு. ஏ.கே. செனெவிரத்ன<br>சபை உறுப்பினர் | 08.07.2011 | 15 |
| திரு. என். குலசேகர<br>சபை உறுப்பினர் | 18.07.2011 | 13 |
| திரு. ஜே. தடல்லகே<br>சபை உறுப்பினர் | 23.06.2010 | 13 |
| திரு. டபிள்யூ. எச். பியதாச<br>சபை உறுப்பினர் | 10.07.2010 | 13 |

நல்லாட்சி நடைமுறைகளுக்கான தமது அர்ப்பணிப்பில் உயர் ஒழுக்க விழுமியங்கள் மற்றும் பொறுப்புக்கூறலுடன் தமது கடமைகளைப் புரிவதற்கு சபை உறுப்பினர்களினால் அதிக கவனம் செலுத்தப்பட்டது. சிறந்த கூட்டுரிமை ஆட்சி முறைமையின் கூறுகளாக வலுவான வியாபார ஒழுக்கங்கள், சிறந்த கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், விளைதிறன் மற்றும்

| | |
|---|---|
| | வினைத்திறன் கொண்ட கண்காணிப்பு முறைமைகள் என்பன கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.<br><br>அனுமதிக்கப்பட்ட வியாபாரத் திட்டம் மற்றும் அடையப்பெற்ற நிறுவனத்தின் நிதி மற்றும் பௌதீக இலக்குகள் என்பவற்றின் அடிப்படையில் ஒரு பொருத்தமான விதத்தில் வியாபாரம் நடாத்தப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு நிறுவனத்தின் அக்கறைகொண்ட தரப்பினருக்கு பொறுப்புக்கூறக்கூடியதாக இச் சபை உள்ளது. |
| நிதி அறிக்கை | உரிய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் விதித்துரைக்கப்பட்டவாறு அரசாங்கத் தேவைப்பாடுகள் என்பவற்றுக்கு ஒத்திசைவாக தே.கா.ந.பொ. நிதிய சபையின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றது என்பதை சபை உறுதிப்படுத்துகின்றது.<br><br>• **ஆண்டறிக்கை 2013**<br><br>அறிவார்ந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கென 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தே.கா.ந.பொ.நிதிய அலுவல்களின் ஒட்டுமொத்தமான ஒரு மதிப்பீட்டினை வழங்கும் நோக்கத்துடன் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆண்டறிக்கை 2013 தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>• **நிதிக் கூற்றுக்கள்**<br><br>தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் ஒத்திசைவாக அதன் நிதிக் கூற்றுக்களை அளித்துள்ளது. |



# 8. ஆட்சியினை அறிக்கையிடல் – தொழில்முயற்சி இடர் முகாமைத்துவம்

# அறிமுகம்

ஆபத்து, இழப்பு, காயம் அல்லது வேறு பாதகமான விளைவுகள் என்பவற்றின் சாத்தியப்பாட்டிற்கேற்ப இடரானது வழக்கமாக வரையறுக்கப்பட்டுள்ளது. கணக்கீடு மற்றும் நிதி என்பவற்றில், தீர்மான மரவரிப் படங்கள், நிகழ்தகவு பரம்பல்கள், கிரய-அளவு-இலாபப் பகுப்பாய்வு, கழிவிடப்பட்ட காசுப் பாய்ச்சல், மூலதனச் சொத்து விலையிடல் மாதிரிகள் மற்றும் இழப்பீட்டுப் பாதுகாப்பு நுட்பங்கள் போன்றவற்றுக்கேற்ப இடரானது கருத்திற் கொள்ளப்படுகின்றது. நிறுவனங்களானவை நிறுவனத்தின் நோக்கங்களை நாடிச்செல்லும், அத்துடன் தமது சகல செயற்பாடுகளினதும் முதலீட்டுப் பட்டியலின் வழியேயும் தமது செயற்பாடுகளுடன் இணைந்த இடர்களை முறையாக எடுத்துரைக்கும் செய்முறையே இடர் முகாமைத்துவம் ஆகும். விளைதிறன் வாய்ந்த இடர் முகாமைத்துவம் உள்ளடக்குவதாவது: இடர் கணிப்பீடு; இடர் மதிப்பீடு; இடர் கையாளல்; மற்றும் இடர் அறிக்கையிடல் ஆகும். நிறுவனத்தின் இடர் நாட்டத்திற்கு இணங்க அவ் இடர்களை இனங்காணலும் கையாளலும் சிறந்த இடர் முகாமைத்துவத்தின் கவனக் குவிப்பாகும். வியாபாரத் தந்திரோபாயத்துடன் இடர் முகாமைத்துவத்தினைச் சீர்செய்வதற்கும் மற்றும் வியாபார நடவடிக்கைகளிற்குள் இடர் முகாமைத்துவ வழக்கம் ஒன்றினை வலுவுற இணைப்பதற்குமான உத்தேசத்தினை தொழில்முயற்சி இடர் முகாமைத்துவ அணுகுமுறையானது கொண்டுள்ளது.

பாதகமானவற்றைத் தவிர்ப்பது எந்தளவோ கிட்டத்தட்ட அந்தளவிற்கு சாதகமான விளைவுகளை அடைந்துகொள்ளும் தனித்த மட்டம் ஒன்றில் இடர் பார்க்கப்பட்டது. எனினும், பாதகமான விளைவுகளை தவிர்ப்பதைப் பற்றியே கூடுதலாக நிறுவன இடர் முகாமைத்துவம் அறிக்கையிடப்பட்டது.

ஒரு நிறுவனத்தின் பணிப்பாளர் சபை, முகாமை மற்றும் ஏனைய ஆளணி ஆகியவற்றினால் விளைவிக்கப்படும், தந்திரோபாயம் அமைத்தல் மற்றும் தொழில்முயற்சியின் வழியே

பிரயோகிக்கப்படும், நிறுவனத்தினைப் பாதிக்கக்கூடிய சாத்தியமான நிகழ்வுகளை இனங்காண்பதற்கும் மற்றும் அதன் இடர் நாட்டத்திற்குள் இருக்கும் இடரினை முகாமைசெய்யவும், நிறுவன நோக்கங்களை அடைந்துகொள்வது தொடர்பில் நியாயமான உறுதிப்பாட்டினை வழங்கவுமென வடிவமைக்கப்படும் செய்முறையாக தொழில்முயற்சி இடர் முகாமைத்துவம் (ERM) வரையறுக்கப்படுகின்றது.

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் பின்பற்றப்படும் தொ.மு.இ.மு. (ERM) இனது அடிப்படை அவசிய தத்துவங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன :

- வியாபாரத் தந்திரோபாயச் சூழமைவிலான அக்கறை
- உயர் மட்டத்திலிருந்து ஏற்படுத்தப்படும் வெளிப்படுத்துகை விதத்துடன் ஒவ்வொருவரினதும் பொறுப்பாக இது இருக்கின்றது.
- சபையினால் வழிப்படுத்தப்படும் ஒரு மையக் குவிப்புத் தந்திரோபாயம்
- செயலூக்க இடர் முகாமைத்துவம்
- இடர் விழிப்புணர்வு வழக்கம் ஒன்றின் உருவாக்கம்
- இடர் முகாமைத்துவத்திற்கான ஒரு முழுமொத்த மற்றும் முழுநிலை அணுகுமுறை
- ஒரு பரந்துபட்ட இடர் வீச்சினைக் கருத்திற்கொள்ளல் (தந்திரோபாயம், நிதி, தொழிற்பாடு மற்றும் ஒத்திசைவு)
- இடர் முகாமைத்துவ சட்டகம் அல்லது முறைமை ஒன்றுக்கூடான அமுலாக்கம்.

**01. தந்திரோபாய இடர்**

தந்திரோபாய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான தோல்விச் சாத்தியப்பாட்டினை தந்திரோபாய இடர் குறிக்கின்றது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தந்திரோபாய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு உதவுவதற்கென, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முகாமையானது பொதுச் சூழலிலுள்ள அரசியல், தொழில்நுட்ப, சமூக- கலாசார, பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் தேசிய காப்புறுதி

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தந்திரோபாய உத்தேசத்தினைப் பாதிக்கக்கூடிய காப்புறுதித் துறையுடன் தொடர்புற்ற இலங்கையின் பணிச் சூழலிலுள்ள போட்டியாளர் மற்றும் வாடிக்கையாளர் இயக்க காரணிகள் ஆகியவற்றை விழிப்பாக கண்காணித்து வருகின்றது.

## 02.வெளிப்படுத்துகை இடர்

உரிமைக் கோரிக்கைச் செலவினைப் பூர்த்திசெய்வதற்குப் பற்றாக்குறையாக இருக்கும் விலைக்கான இடரினை மீள்காப்புறுதி உத்தரவாதக்காரர் ஒருவர் ஏற்றுக்கொள்ளும் போது வெளிப்படுத்துகை இடர் எழக்கூடும். ஒழுங்கான அடிப்படை ஒன்றில் வாடிக்கையாளர்களுக்கு தே.கா.ந.பொ. நிதியமானது வழங்கும் இலாபத்தன்மை, விலையிடல் மற்றும் நியதி நிபந்தனைகள் என்பவற்றை அது மீளாய்வுசெய்கின்றது. இடர்கள் துல்லியமாக மதிப்பிடப்பட்டு இடர்த் தடுப்பு தந்திரோபாயங்களின் பேரில் உரிய பரிந்துரைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கென அத்தகைய இடர்களைத் தணிப்பதற்கு பெருமளவில் தவணைக் கட்டண வரையறுப்புக் குழுவினால் இடர்க் கணிப்பீடுகள் செய்யப்படுகின்றன. காப்பினை அளிப்பதற்கு முன்னர் முன்மொழிவுப் படிவங்கள் உள்ளடங்கலான உரிய சகல தகவல்களையும் உன்னிப்பாக அவதானிக்க மீள்காப்புறுதி அலுவலர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். மீள்காப்புறுதி அலுவலர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்களுக்கு மேலதிகமாக, நடைமுறைக் கைந்நூல்கள் கிடைக்கக்கூடியதாக உள்ளதுடன் தேவைப்படுத்தப்பட்டவாறு இற்றைப்படுத்தப்படுகின்றன. போதுமானளவு கடமைப் பிரிப்புக்களை தே.கா.ந.பொ. நிதியக் கம்பனி உறுதிப்படுத்துகின்றது.

## 03. சர்வதேச இடர்

சர்வதேச சூழலில் அரசியல், பொருளாதார, சமூக–கலாசார, தொழில்நுட்பக் காரணிகளின் தளம்பல் காரணமாக தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தொழிலினைப் பாதகமாகப் பாதிக்கின்ற சாத்தியப்பாட்டினை சர்வதேச இடர் குறிக்கின்றது. தே.கா.ந.பொ. நிதியத்தின் தொழிலின் மீது நேரடியான தாக்கத்தினைக் கொண்டுள்ள சர்வதேச அரசியல் மற்றும்

சமூக-பொருளாதார இயக்கக் காரணிகள் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் கண்காணிக்கப்பட்டுள்ளன. இவை விசேடமாக தே.கா.ந.பொ. நிதியத்தின் மீள்காப்புறுதித் துறையுடன் தொடர்புபட்ட சர்வதேச வியாபாரப் போக்குகளின் கண்காணிப்பை உள்ளடக்குகின்றன.

### 04. திரவத்தன்மை இடர்

நிதிக் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு, காசின் கிடைப்பனவின்மை அல்லது குறுங் காலப்பகுதி ஒன்றுக்குள் காசாக மாற்றப்படக்கூடிய சொத்துக்களின் அடைவுப் பற்றாக்குறையே திரவத்தன்மை இடராகும். சட்ட ரீதியானவை மற்றும் மதிப்பு ரீதியானவை போன்ற ஏனைய இடர்களில் இணைப்பதற்கான சிறந்த போக்கு ஒன்றினை திரவத்தன்மை இடர் கொண்டுள்ளது அத்துடன் முறையான திரவ இடர் முகாமைத்துவம் முக்கியமானதாகும். மீள்கொள்வனவு (Repos), வெவ்வேறான முதிர்ச்சிக்காலங்களைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள், வெவ்வேறான முதிர்ச்சிக்காலங்களைக் கொண்ட திறைசேரி முறிகள் மற்றும் தொகுதிக்கடன்கள் போன்ற வெவ்வேறான முதிர்ச்சிக்காலங்களைக் கொண்ட முதலீட்டு பல்வகைப்படுத்தலுக்கூடாக திரவத்தன்மை இடர் அல்லது உரிமைக்கோரிக்கைக் கொடுப்பனவுகள், மீள்காப்புறுதிக் கொடுப்பனவுகள் மற்றும் நிதிய மாற்றல்கள் போன்ற ஒப்பந்தக் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கான இயலாமை குறைக்கப்பட்டுள்ளது.

### 05. சந்தை / வியாபார இடர்

சில வியாபாரங்களில் மாத்திரம் கவனம் குவிக்கப்படும் போது வியாபார இடர் எழுகின்றது. அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டத்தினை ஒரு இலாபகரமான முயற்சியாக மாற்றுதல், 20% இலிருந்து 30% வரை கட்டாய மீள்காப்புறுதி வீதத்தினை அதிகரித்தல் அத்துடன் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய காப்புறுதி, மோட்டார் வாகனக் காப்புறுதி, வெளிநாட்டுத் தொழில் காப்புறுதி, பொதுக் காப்புறுதி போன்ற பல்வேறுப்பட்ட காப்புறுதித் தொழில்களாக பன்முகப்படுத்துதல் போன்ற ஏற்கனவேயுள்ள தொழில்களை விருத்திசெய்வதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதன் மூலம் இது குறைக்கப்பட்டுள்ளது.

**06. மனித வள இடர்**

மனித வளத் துறையிலுள்ள பிரதான இடரானது ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த அலுவலர் புறள்வு விகிதங்களை விளைவித்துள்ள தொழிலிலுள்ள தொழில்சார் தகைமைவாய்ந்த ஆளணியின் பற்றாக்குறையாகும். சகல மட்டங்களிலும் ஊழியர்களின் தொடர்ச்சியான கல்வி மற்றும் அபிவிருத்திக்கு உதவுதலே தே.கா.ந.பொ. நிதிய மனித வள (HR) கொள்கையின் இலக்காகும்.

**07. உரிமைக் கோரிக்கைத் தீர்ப்பனவு இடர்**

மோசடி, சட்ட மற்றும் தொழில்நுட்பக் காரணிகளின் காரணமாக எழும் சாத்தியமான பிணக்கு இடரானது உரிமைக் கோரிக்கைகளை அனுமதித்தல் மற்றும் உரிமைக் கோரிக்கைகளைச் செய்முறைப்படுத்துதலில் கடமைகளைப் பகுத்தல் என்பவற்றில் கடுமையான ஒழுங்குவிதிகளை விதிப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதனூடாக கட்டுப்படுத்தப்படுகின்றது.

**08. அந்நியச் செலாவணி பரிமாற்று இடர்**

அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல் இடரினை இல்லாமற் செய்வதற்கென, மீள்காப்புறுதி தவணைக் கட்டணக் கொடுப்பனவிற்காக உள்நாட்டு நாணயப் பெறுமதிகளில் மீள்காப்புறுதி உடன்படிக்கைகள் ஒப்பந்தஞ் செய்யப்பட்டுள்ளன.

**09. தொழிற்பாட்டு இடர்**

தொழிற்பாடுகளைக் கணனிமயப்படுத்துவதன் மூலம் தொழிற்பாட்டு இடர் குறைக்கப்படுகின்றது. வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியத்தின் உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடானது தவணைக் கட்டணச் சேகரிப்பு மற்றும் உரிமைக் கோரிக்கைக் கொடுப்பனவுகள் என்பவற்றின் வழுக்கள் மற்றும் வேறுபாடுகளைக் குறைப்பதற்கென உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தினால் செய்யப்பட்டுள்ளது. மேலும் வழுக்கள் மற்றும்

வேறுபாடுகளைக் குறைக்கும் பொருட்டு அலுவல நடவடிக்கைகள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.

**10. த.தொ. (IT) இடர்**

த.தொ. (IT) இடர்களுக்கும் பல்வேறுபட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் மூலம் முகங்கொடுக்கப்பட்டுள்ளது. வைரஸ் (virus) தாக்குதல்களைத் தடுக்கும் பொருட்டு சொபொஸ் (Sophos) வைரஸ் தடுப்பு பொதியானது தே.கா.ந.பொ. நிதியத்திலுள்ள கணனிகளில் நிறுவப்பட்டுள்ளது. முறைமைத் தோல்விகள் (systems failures) காரணமான இழப்புக்களானவை நகலாக்க (backup) சேமிப்பு முறைமைகள் மற்றும் இடையறாத மின் வழங்கல் முறைமைகள் என்பவற்றின் மூலம் குறைக்கப்பட்டுள்ளன.

**இடர் கணிப்பீட்டுச் சட்டகம்**

விளைவின் அடிப்படையில், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பிரதான இடர்களின் தொடரான பகுப்பாய்விற்கு கீழ்க் குறிப்பிடப்பட்ட இடர் கணிப்புச் சட்டகத்திலுள்ள இடர்களின் தீவிரத்தன்மை மற்றும் நிகழும் தடவைகளினைச் சார்ந்து முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

| | | நிகழும் தடவைகள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| விளைவு | 1 | | | | | R09 |
| | 2 | | | | R04<br>R06 | |
| | 3 | | R07<br>R05 | R03 | R02<br>R08 | |
| | 4 | | | R10 | R01 | |
| | 5 | R06 | | | | |

R01. தந்திரோபாய இடர்

R02. வெளிப்படுத்துகை இடர்

R03. சர்வதேச இடர்

R04. திரவத்தன்மை இடர்

R05. சந்தை / வியாபார இடர்

R06. மனித வள இடர்

R07. உரிமைக் கோரிக்கைத் தீர்ப்பனவு இடர்

R08. அந்நியச் செலாவணி பரிமாற்று இடர்

R09. தொழிற்பாட்டு இடர்

R10. த.தொ. (IT) இடர்



# 9. நிதிக் கூற்றுக்கள் -2013

# வருமானக் கூற்று

**டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது** (இலங்கை ரூபாவில்)

| | குறிப்புக்கள் | 2013 | 2012 |
|---|---|---|---|
| மொத்த உழைப்புத் தவணைக் கட்டணம் | 01 | 4,168,033,208 | 3,120,006,892 |
| அக்ரஹாரவிற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பங்களிப்பு | 02 | 1,406,706,842 | 863,435,521 |
| சேகரிக்கப்பட்ட பயிர்க் காப்புறுதி விதிப்பனவு | | 440,836,600 | - |
| ஈட்டப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கில் தேறிய மாற்றம் | | (563,257,987) | (95,954,471) |
| மொத்த ஈட்டப்பட்ட தவணைக் கட்டணம் | | **5,452,318,662** | 3,887,487,941 |
| மீள்காப்புறுதிக்கு மீளளிக்கப்பட்ட தவணைக் கட்டணம் | | - | (1,304,600) |
| ஈட்டப்படாத மீள்காப்புறுதி தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கில் தேறிய மாற்றம் | | - | |
| தேறிய ஈட்டப்பட்ட தவணைக் கட்டணம் | | **5,452,318,662** | **3,886,183,341** |
| ஏனைய வருமானம் | | | |
| நிதி வருமானம் | 03 | 697,407,976 | 615,813,544 |
| நிகர தேறிய இலாபம் | | 3,303,729 | - |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | | 861,272 | 26,164,498 |
| | | 701,572,977 | 641,978,043 |
| மொத்த தேறிய வருமானம் | | **6,153,891,639** | **4,528,161,384** |

**நன்மைகள் உரிமைக்கோரிக்கைகள் மற்றும் செலவினங்கள்**

| | | | |
|---|---|---|---|
| **தேறிய காப்புறுதி நன்மையும் உரிமைக்கோரிக்கையும்** | 04 | (1,381,299,662) | (1,933,681,262) |
| **மீள்காப்புறுதி உத்தரவாத மற்றும் அடைதல் கிரயம்** | 05 | (382,177,026) | (347,789,490) |
| **ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள்** | 06 | (141,108,634) | (148,828,347) |
| **நிதிக் கிரயம்** | | (8,459,075) | (14,839,119) |
| **மொத்த நன்மைகள் உரிமைக்கோரிக்கைகள் மற்றும் செலவினங்கள்** | | **(1,913,044,397)** | **(2,445,138,218)** |
| **வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)** | | **4,240,847,242** | 2,083,023,166 |
| **வருமான வரிச் செலவினங்கள்** | | - | - |
| **ஆண்டுக்கான இலாபம்/ (நட்டம்)** | | **4,240,847,242** | **2,083,023,166** |

# ஐந்தொகை

**தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை**

**நிதி நிலைமைக் கூற்று**

**டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு**

(இலங்கை ரூபாவில்)

| சொத்துக்கள் | குறிப்புக்கள் | 2013 | 2012 |
|---|---|---|---|
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண. | 07 | 19,317,968 | 24,739,202 |
| நிதி முதலீடுகள் | 08 | 6,667,518,021 | 5,375,914,672 |
| வருமதியாகவுள்ள தவணைக் கட்டணம் | 09 | 814,910,533 | 491,727,358 |
| காசும் காசுக்குச் சமனானதும் | 10 | 305,495,813 | 103,641,397 |
| ஏனைய வருமதிகள் | 11 | 871,139,458 | 1,172,920,478 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **8,678,381,792** | **7,168,943,107** |
| **உரிமை முதல்** | | | |
| **தொழில்நுட்ப ஒதுக்கு** | | | |
| ஏனைய ஒதுக்குகள் | 12 | 1,622,656,295 | 1,059,398,308 |
| பிற்போடப்பட்ட தரகு | 13 | (199,173,169) | (176,532,688) |
| **வருமான ஒதுக்கு** | | | |
| திரண்ட நிதியம் | 14 | 6,950,664,274 | 5,912,918,517 |
| மொத்த உரிமை முதலும் ஒதுக்குகளும் | | **8,374,147,400** | **6,795,784,137** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| சென்மதி உரிமைக்கோரிக்கை | 15 | 273,060,335 | 286,078,049 |
| ஏனைய சென்மதிகள் | 16 | 31,174,057 | 87,080,920 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **304,234,392** | **373,158,970** |
| **மொத்த உரிமை முதலும் பொறுப்புக்களும்** | | **8,678,381,792** | **7,168,943,107** |

இந் நிதியத்தின் நிதிக்கூற்றானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாட்டுடன் ஒத்திசைகின்றது என்பதை நான் சான்றுப்படுத்துகின்றேன்.

.......................

நிதி முகாமையாளர்

நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து அளிப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையது.

சபையின் சார்பில் ஒப்பம்

1. .......................................

2. .......................................

# திரட்டு நிதிய மாற்றக் கூற்று

| | 2013 | 2012 |
|---|---|---|
| ஆண்டுத் தொடக்கத்தில் மீதி | 5,912,918,517 | 8,497,449,708 |
| கழிப்பனவு: முன்னைய வருடச் சீராக்கங்கள் மோட்டார் | (5,964,896) | (467,554,357) |
| சேர்ப்பனவு: முன்னைய வருடச் சீராக்கங்கள் SRCC | 2,863,411 | |
| திரட்டு நிதியத்திற்கு செலுத்தப்பட்ட விதிப்பனவு | (3,200,000,000) | (4,200,000,000) |
| ஆண்டுக்காக நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் (நட்டம்) | 4,240,847,242 | 2,083,023,166 |
| ஆண்டிறுதியிலுள்ளவாறு மீதி | **6,950,664,274** | **5,912,918,517** |

# காசுப் பாய்ச்சல் கூற்று

(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)

*டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது*

| | 2013 | 2012 |
|---|---|---|
| ***தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்*** | | |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம் | **4,240,847,242** | 2,083,023,166 |
| கழிப்பனவு: திரட்டு நிதியத்துக்கான பங்களிப்பு | **(3,200,000,000)** | (4,200,000,000) |
| கழிப்பனவு: முன்னைய ஆண்டுச் சீராக்கம் | **(3,101,485)** | (467,554,357) |
| | **1,037,745,757** | (2,584,531,191) |
| ***சீராக்கங்கள்:*** | | |
| தேய்மானம் | **9,604,450** | 10,820,514 |
| PPE விற்பனை நட்டம் | **-** | 1,731,806 |
| முதலீட்டு வருமானம் | **(691,472,899)** | (615,813,544) |
| ஈட்டப்படாத தவணைக் கட்டண வருமானம் | **563,257,987** | 95,954,471 |
| பிற்போடப்பட்ட தரகு | **(22,640,481)** | (15,045,973) |
| ***தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்*** | **896,494,813** | (3,106,883,918) |
| வருமதிகளில் குறைவு/ (அதிகரிப்பு) | **(21,402,155)** | 263,166,729 |
| சென்மதி உரிமைக் கோரல்களில் அதிகரிப்பு | **(13,017,714)** | (106,332,722) |
| ஏனைய சென்மதிகளில் அதிகரிப்பு | **(55,906,863)** | (166,039,128) |
| ***தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு*** | **806,168,081** | **(3,116,089,038)** |
| ***முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்*** | | |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணக் கொள்வனவுகள் | **(4,183,215)** | (8,154,600) |
| சொத்து அகற்றல் நடவடிக்கைகள் | **-** | 469,956 |
| அரச ஆவணங்களிலிருந்தான (முதலீட்டு) மீள்பெறுவனவுகள் | **(1,291,603,348)** | (931,368,410) |
| முதலீட்டு வருமானம் | **691,472,898** | 615,813,544 |

| | | |
|---|---|---|
| *முதலீட்டுச் செயற்பாடுகளில் பாவிக்கப்பட்ட தேறிய காசு* | **(604,313,665)** | **(323,239,510)** |
| *காசும் காசுக்குச் சமமானவற்றினதும் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)* | **201,854,416** | (3,439,328,548) |
| *காலப்பகுதியின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமனான விடயங்களும்* | **103,641,397** | 3,542,969,945 |
| *காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்குச் சமனான விடயங்களும்* | **305,495,813** | **103,641,397** |
| | | - |
| டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு காசும் காசுக்குச் சமனான விடயங்களும் | **305,495,813** | 103,641,397 |

# கணக்கீட்டுக் கொள்கைகள்

**1.0 கூட்டுரிமைத் தகவல்**

"2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்" மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது ("இந் நிதியம்") உருவாக்கப்பட்டு இலங்கையில் அமையப் பெற்றுள்ளது. தே.கா.ந.பொ.நிதியத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது இல. 97, மருதானை வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் அமைந்துள்ளதுடன் பிரதான தொழில் தளமும் இம் முகவரியிலேயே அமைந்துள்ளது.

**2.0 முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள்**

**2.1 தயாரிப்பு அடிப்படை**

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க வரலாற்றுக் கிரயத் தத்துவத்தின் கீழ் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் (ரூபா.) தரப்பட்டுள்ளன.

பணவீக்கக் காரணிகளுக்கான சீராக்கம் எதுவும் இக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பொருத்தமானவிடத்து, கணக்கீட்டுக் கொள்கைகளானவை அடுத்து வரும் குறிப்புக்களில் விளக்கப்பட்டுள்ளன.

**2.2 ஒப்பீட்டுத் தரவுகள்**

கணக்கீட்டுக் கொள்கைள் இந் நிதியத்தினால் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன என்பதுடன் முன்னைய வருடத்தில் பாவிக்கப்பட்டவற்றுடன் ஒத்திசைந்தும் உள்ளன. இவ் ஆண்டின் அளிக்கைக்கு அவசியமான இடமெல்லாம் முன்னைய வருட தரவுகள் மீள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

**2.3மூலதன ஈடுபாடு**

ஐந்தொகை திகதியிலுள்ளவாறு எவ்வித மூலதன ஈடுபாடும் இல்லை.

# கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.4 காசுப் பாய்ச்சல் கூற்று

"மறைமுக முறையினை" பாவித்து காசுப் பாய்ச்சற் கூற்று தயாரிக்கப்படுகின்றது.

### 2.5 தொடர்புபட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்

தொடர்புபட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் எவையுமில்லை.

### 2.6 ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகளின் சகல விடயங்களும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நிதிக் கூற்றுக்களுக்கான உரிய குறிப்புக்களில் பொருத்தமான சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

### 2.7 சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்பு அடிப்படைகளும்

#### 2.7.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன கிரயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன சொத்துக்களை அதன் உத்தேச பாவனைக்காக அதன் தொழிற்படு நிலைக்கு கொண்டுவருவதில் ஏற்பட்ட ஏதேனும் செலவுகளையும் ஒன்றுசேர்த்த கொள்வனவுக் கிரயமாக உள்ளது.

நிதியத்தினைத் தொடர்வதற்காக நிரந்தர தன்மையில் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளுதல், விஸ்தரித்தல் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக ஏற்படும் செலவினம்.

**பெறுமானத் தேய்வு**

சகல ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றினதும் கிரயத்தின் பேரில் நேர்கோட்டு முறையினைப் பாவிப்பதன் மூலம் சமமான வருடாந்த தவணைக் கட்டணங்கள் மூலம் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்கு அத்தொகையினைப் பதிவழிப்பதற்கென பெறுமானத் தேய்வேற்பாடு பின்வருமாறு கணிப்பிடப்படுகின்றது.

| | |
|---|---|
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 10 வருடத்திற்கு மேலாக |
| தளபாடமும் பொருத்துக்களும் | 08 வருடத்திற்கு மேலாக |
| அலுவலக உபகரணங்கள் | 06 வருடத்திற்கு மேலாக |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடத்திற்கு மேலாக |

# கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.7.2 முதலீடுகள்

முதலீடுகள் கிரயத்தில் காட்டப்பட்டுள்ளன.

### 2.7.3 வருமதிகள்

தவணைக் கட்டணங்கள், வட்டி மற்றும் ஏனைய வருமதிகளைச் சேகரிக்கும் ஆற்றல் தொடர்ந்துசெல்லும் மீதி முறையில் மீளாய்வு செய்யப்படுகின்றது. சேகரிக்கப்பட முடியாதவை என அறியப்படும் கடன்படுநர் மற்றும் ஏனைய வருமதிகள் பதிவழிக்கப்பட்டுள்ளன.

### 2.7.3 காசும் காசுக்குச் சமமான விடயங்களும்

காசும் காசுக்குச் சமமான விடயங்களும் கையிலுள்ள காசு, காசுப் பாய்ச்சற் கூற்று நோக்கத்திற்காக வங்கியிலுள்ள கேள்வி வைப்பு என வரையறுக்கப்படுகின்றது. காசும் காசுக்குச் சமமான விடயங்களும் கையிலுள்ள காசு, வங்கி மேலதிகப்பற்றில் நிலுவையாக இருக்கும் வங்கி வைப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

## 2.8 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடு

### 2.8.1 ஈட்டப்படாத தவணைக் கட்டணங்கள்

ஈட்டப்படாத தவணைக் கட்டணங்களானவை ஐந்தொகைத் திகதிக்கு அடுத்து இடர் காலப்பகுதியுடன் தொடர்புற்ற வருடம் ஒன்றில் ஈட்டிய தவணைக் கட்டணத்தின் அவ் விகிதசமமாக உள்ளன. மொத்த தவணைக்கட்டணத்தின் 24 ஆவது அடிப்படையில் ஈட்டப்படாத தவணைக் கட்டணங்கள் கணிப்பிடப்படுகின்றது.

### 2.8.2 ஒத்திவைக்கப்பட்ட தரகு

ஈட்டப்படாத தவணைக் கட்டணத்துடன் தொடர்புறும் தேறிய தரகினையே ஒத்திவைக்கப்பட்ட தரகு குறிக்கின்றது.

### 2.8.3 இலாபத் தரகு

இலாபத் தரகானது இரண்டு தவணைக் கட்டணங்களாக கணிப்பீடு செய்யப்பட்டு செலுத்தப்படுகின்றது. கணக்கீட்டுக் காலப்பகுதியின் முடிவின் பின்னர் ஆறு மாதங்களுக்குப்

பின்னர் முதல் தவணைக் கட்டணமும் கணக்கீட்டுக் காலப்பகுதியின் முடிவின் பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்குப் பின்னர் இரண்டாம் தவணைக் கட்டணமும் செலுத்தப்படுகின்றது.

### 2.8.4 செலுத்தப்பட வேண்டிய கோரிக்கைத் தொகைகள்

உரிய நிதியாண்டில் செலுத்தப்படாத அனுமதிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கைகளையும் மீள்காப்புறுதி மற்றும் எஞ்சியுள்ள அறவிடல்களுக்காக செய்யப்பட்ட தொடர்புபட்ட செலவினங்கள் மற்றும் கழிப்பனவுகளுடன் நிதியத்தின் உறுப்பினர்களினால் பிரகடனப்படுத்தப்பட்ட நிலுவையாக உள்ள கோரிக்கைத் தொகைகளுக்கான ஏற்பாடு ஏதேனுமிருப்பின் அதனையும் உரிமைக்கோரிக்கைகள் உள்ளடக்குகின்றன.

# கணக்கீட்டுக் கொள்கைகள்

**2.8.5 ஏனைய சென்மதிகள்**

ஏனைய சென்மதிகள் அவற்றின் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**2.8.6 ஏனைய ஏற்பாடுகள்**

ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறு சகல அறியப்பட்ட ஏற்பாடுகளும் கணக்குகளில் முழுமையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**2.9 வருமானங்களும் செலவுகளும்**

**2.9.1 வருமானம்**

பொருளாதார நன்மையானது நிதியத்திற்கு செல்லும் என்பது சாத்தியமாக இருக்கும் ஓர் அளவிற்கு வருமானம் இனங்காணப்படுவதுடன் வருமானத்தினை நம்பிக்கையாக அளவிட முடியும். வருமானம் இனங்காணப்படுவதற்கு முன்னர் பின்வரும் குறித்த இனங்காணல் தகுதிவிதிகளையும் பூர்த்திசெய்தல் வேண்டும்.

**அ. தவணைக் கட்டணப் பங்களிப்புக்கள்**

தவணைக் கட்டணப் பங்களிப்புக்களானவை அவை நிலுவையாக உள்ள போது இனங்காணப்படுகின்றன.

**ஆ. வட்டி வருமானம்**

எதிர்கால சேகரிப்பு சந்தேகமாக இருந்தாலொழிய வட்டியானது அட்டுறுவதாக வட்டி வருமானம் இனங்காணப்படுகின்றது.

**2.9.2 செலவினத்தை இனங்காணுதல்**

நிதியத்தினை நடாத்துவதிலும் வினைத்திறனான நிலமை ஒன்றில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றைப் பேணுவதிலும் உள்ளாகும் சகல செலவினமும் தேறிய மிகையினை அடைவதிலான வருமானத்துக்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

**2.10 எதிர்பாராத நிகழ்வுகள்**

சபையின் அபிப்பிராயத்தில், சாதாரண வியாபார தொடர் செயற்பாட்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு எதிராக தற்போதுள்ள வழக்கானது அறிக்கையிட்ட நிதிப் பெறுபேறுகளிலோ அல்லது நிதியத்தின் எதிர்காலச் செயற்பாட்டிலோ முக்கியமான தாக்கம் ஒன்றினைக் கொண்டிருக்காது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது** (சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)

## 01 மொத்த உழைப்புத் தவணைக் கட்டணம்

பிரதான வியாபார வகுப்புக்களின் மூலம் ஆண்டுக்கான தவணைக் கட்டண வருமானம் பின்வருமாறு

| | 2013 | 2012 |
|---|---|---|
| மீள்காப்புறுதி | 1,042,220,495 | 463,610,216 |
| வே.க.சி.கொ.ப.நி. தவணைக் கட்டணம் (SRCC & Tr.) | 2,543,782,803 | 2,281,176,063 |
| பொதுக் காப்புறுதி - மோட்டார் | 174,785,654 | 206,595,378 |
| பொதுக் காப்புறுதி - மருத்துவம் மற்றும் ஏனையவை | 17,915,562 | 158,625,235 |
| பயிர்க் காப்புறுதி - விவசாயிகளிடமிருந்தான தவணைக் கட்டணம் | 379,328,695 | - |
| பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மருத்துவத் திட்டம் | 10,000,000 | 10,000,000 |
| ஒட்டுமொத்தமான மொத்த உழைப்புத் தவணைக் கட்டணம் | **4,168,033,208** | **3,120,006,892** |

## 02 அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்காக சேகரிக்கப்பட்ட பங்களிப்பு

| | 2013 | 2012 |
|---|---|---|
| உறுப்பினர்களிடமிருந்தான பங்களிப்பு | 996,706,842 | 588,435,521 |
| திறைசேரியிடமிருந்தான பங்களிப்பு | 410,000,000 | 275,000,000 |
| அக்ரஹாரவிற்காகச் சேகரிக்கப்பட்ட மொத்தப் பங்களிப்பு | **1,406,706,842** | **863,435,521** |

## 03 நிதி வருமானம்

| | 2013 | 2012 |
|---|---|---|
| **முதிர்வில் வைத்திருக்கப்படக்கூடியவாறு வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | |
| திறைசேரி முறி | 237,289,715 | 118,010,121 |
| தொகுதிக்கடன் | 115,350,967 | 114,720,633 |
| | **352,640,682** | **232,730,755** |
| **விற்பனைக்கு கிடைக்கக்கூடியவாறு வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | |
| திறைசேரி உண்டியல் | 52,770,580 | 53,317,809 |

| | | |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் | 286,061,637 | 329,764,980 |
| | **338,832,218** | **383,082,790** |
| **மொத்த நிதி வருமானம்** | **691,472,899** | **615,813,544** |

04 **தேறிய காப்புறுதி நன்மையும் உரிமைக்கோரிக்கையும்**

| | 2013 | 2012 |
|---|---|---|
| மீள்காப்புறுதி | 20,730,824 | 308,239,012 |
| வே.க.சி.கொ.ப.நி. (SRCC & Tr.) | 2,331,835 | 37,076,159 |
| பொதுக் காப்புறுதி - மோட்டார் | 116,636,252 | 115,629,748 |
| பொதுக் காப்புறுதி - மருத்துவம் மற்றும் ஏனையவை | 85,707,270 | 404,869,568 |
| பயிர்க் காப்புறுதி | 10,436,648 | - |
| பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மருத்துவத் திட்டம் | 15,333,763 | 12,564,947 |
| அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம் | 1,130,123,071 | 1,055,301,828 |
| ஒட்டுமொத்த தேறிய காப்புறுதி நன்மையும் உரிமைக்கோரிக்கையும் | **1,381,299,662** | **1,933,681,262** |

05 **மீள்காப்புறுதி உத்தரவாத மற்றும் அடைதல் கிரயம்**

| | 2013 | 2012 |
|---|---|---|
| மீள்காப்புறுதி உத்தரவாத மற்றும் கொள்கை அடைவுக் கிரயம் - வே.க.சி.கொ.ப.நி. | 404,817,508 | 347,789,490 |
| பிற்போட்ட அடைவுக் கிரயத்திற்கான ஒதுக்கில் தேறிய மாற்றம் | (22,640,481) | |
| மொத்த மீள்காப்புறுதி உத்தரவாத மற்றும் அடைதல் கிரயம் | **382,177,026** | **347,789,490** |

06 **ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள்**

| | 2013 | 2012 |
|---|---|---|
| கணக்காய்வாளர் ஊதியம் | 337,500 | 338,160 |
| ஊழியர் நலன்சார் செலவுகள் | 76,487,490 | 72,006,709 |
| நிர்வாக மற்றும் தாபனச் செலவுகள் | 52,770,118 | 63,125,974 |
| விற்பனைச் செலவுகள் | 808,660 | 1,186,145 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத் தேய்வு | 9,604,450 | 10,820,514 |
| சட்டக் கட்டணங்கள் | 521,386 | 902,115 |
| நன்கொடைகள் | 579,030 | 448,730 |
| | **141,108,634** | **148,828,347** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

(இலங்கை ரூபாவில்)

## 07 ஆதனங்களும் பொறித்தொகுதிகளும் உபகரணங்களும்

| | மோட்டார் வாகனங்கள் | அலுவலக உபகரணங்கள் | தளபாடங்களும் பொருத்துக்களும் | மென் பொருட்கள் | நானாவித சொத்துக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **கிரயம்:** | | | | | | |
| 2013.01.01 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி | 34,470,255 | 30,928,294 | 6,438,328 | 6,542,073 | 71,988 | **78,450,938** |
| சேர்த்தல்கள் | - | 3,531,635 | 651,580 | - | - | **4,183,215** |
| கையுதிர்த்தல்கள் | - | - | - | - | - | **-** |
| **2013.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி** | **34,470,255** | **34,459,929** | **7,089,908** | **6,542,073** | **71,988** | **82,634,153** |
| **தேய்வு:** | | | | | | |
| 2013.01.01 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி | 28,767,528 | 15,400,576 | 3,069,217 | 6,448,518 | 25,897 | **53,711,736** |
| ஆண்டுக்கான விதிப்பனவு | 4,294,991 | 4,421,737 | 811,355 | 76,367 | - | **9,604,450** |
| ஆண்டுக்கான கையுதிர்ப்பு | - | - | - | - | - | **-** |
| **2013.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி** | **33,062,519** | **19,822,313** | **3,880,571** | **6,524,886** | **25,897** | **63,316,185** |
| | | | | | | **-** |
| 2013.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு சொத்தி | **1,407,736** | **14,637,617** | **3,209,337** | **17,188** | **46,091** | **19,317,968** |

## 08 நிதி முதலீடு

| | 2013 | 2012 |
|---|---|---|
| **திறைசேரி உண்டியல்கள்** | 1,933,202,150 | 628,369,600 |
| **திறைசேரி உண்டியல்கள்- மீள்கொள்வனவு** (REPO) | 1,477,410,933 | 2,031,982,426 |
| **திறைசேரி முறிகள்** | 2,400,627,345 | 1,694,634,700 |
| **தொகுதிக்கடன்கள்** | 1,045,780,000 | 1,045,780,000 |
| **கழிப்பனவு** | | |
| **தீர்க்கப்படாத கழிவு** | (189,502,408) | (26,380,841) |
| **சேர்ப்பனவு** | | |
| **தீர்க்கப்படாத தவணைக்** | - | 1,528,787 |

| கட்டணம் | | |
|---|---|---|
| **மொத்த நிதி முதலீடு** | **6,667,518,021** | **5,375,914,672** |

**09 தவணைக் கட்டண வருமதி**

| | 2013 | 2012 |
|---|---|---|
| மீள்காப்புறுதி | 462,968,508 | 180,811,195 |
| வே.க.சி.கு.ப.நி. (SRCC & Tr) தவணைக் கட்டணம் | 349,986,352 | 308,960,490 |
| பொதுக் காப்புறுதி – மருத்துவமும் ஏனையவையும் | 1,955,673 | 1,955,673 |
| **மொத்த தவணைக் கட்டண வருமதி** | **814,910,533** | **491,727,358** |

**10 காசும் காசுக்குச் சமனானதும்**

| | 2013 | 2012 |
|---|---|---|
| **வங்கியிலுள்ள காசு** | | |
| மக்கள் வங்கி - நடைமுறைக் கணக்கு அக்ரஹார - 033100142467951 | (645,717) | (648,259) |
| மக்கள் வங்கி- சேமிப்புக் கணக்கு அக்ரஹார- 033200122467951 | 20,404,203 | 18,301,965 |
| மக்கள் வங்கி-நடைமுறைக் கணக்கு மோட்டார் - 033100160000058 | 721,004 | 7,215,905 |
| மக்கள் வங்கி-நடைமுறைக் கணக்கு மீள்காப்புறுதி - 033100100000061 | 1,815,444 | 6,702,652 |
| மக்கள் வங்கி-நடைமுறைக் கணக்கு பயிர்க் காப்புறுதி - 033100502467951 | 22,913,768 | - |
| மக்கள் வங்கி-நடைமுறைக் கணக்கு-வெளிநாடு - 033100150000228 | 598,614 | (1,820,075) |
| மக்கள் வங்கி வ.அ.நா.க (RFC ) யூரோ கணக்கு -033407132467951 | 10,517,416 | 9,655,662 |
| மக்கள் வங்கி வ.அ.நா.க (RFC ) | | |

| | | |
|---|---|---|
| **யு.எஸ்.டீ. கணக்கு** - 033402142467951 | 163,459,183 | 89,322,297 |
| **மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கு பயிர் விதிப்பனவு** - 033200302467951 | 313,452 | - |
| **மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு-புதியது**-033100322467951 | (54,516,844) | (37,644,867) |
| **மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு-பொது**-033100412467951 | 303,339 | 841,653 |
| **பி.ஏ.பீ.சி.** (PABC ) **சேமிப்புக் கணக்கு- பொது**-312948280215 | 1,191,137 | 1,116,214 |
| **மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கு- பொது**-033200212467951 | 297,240 | 1,782,590 |
| **மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு இல.** - 14100127679733 | 137,478,867 | 8,176,291 |
| **இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு இல.** - 0006573953 | 501,122 | 500,000 |
| **கையிலுள்ள காசு** | 143,584 | 139,369 |
| **மொத்த காசும் காசுக்குச் சமனானதும்** | **305,495,813** | **103,641,397** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

(இலங்கை ரூபாவில்)

**11** ஏனைய வருமதிகள்

| | 2013 | 2012 |
|---|---|---|
| வருமதியாகவுள்ள வட்டி | 160,516,011 | 149,310,648 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 12,092,199 | 11,078,483 |
| மீள்காப்புறுதித் திணைக்களத்திடமிருந்தான வருமதிகள் | 0 | 5,349,749 |
| வே.க.சி.கு. (SRCC) இடமிருந்தான வருமதிகள் | 8,844,083 | - |
| மோட்டார் திணைக்களத்திடமிருந்தான வருமதிகள் | 973,009 | |
| வருமதியாகவுள்ள முற்பணங்கள் | 1,056,376 | 481,841 |
| மென் கடன்கள் | 622,760,214 | 958,456,782 |
| WHT வருமதிகள் | 34,618,240 | 23,114,660 |
| மீளளிக்கக்கூடிய வைப்பு | 9,415,854 | 9,800,688 |
| அலுவலர் குழாம் கடன்கள் | 19,074,595 | 13,553,748 |
| முற்செலுத்திய செலவுகள் | 7,819 | 5,092 |
| உறுப்பினர்களிடமிருந்து வருமதியாகவுள்ள காசோலை வருவாய்கள் | 1,781,057 | 1,768,785 |
| | **871,139,458** | **1,172,920,478** |

**12** ஏனைய ஒதுக்குகள்

| | 2013 | 2012 |
|---|---|---|
| **ஈட்டப்படாத தவணைக் கட்டணம்** | | |
| வருடத் தொடக்கத்திலுள்ளவாறு மீதி | 1,059,398,308 | 963,443,837 |
| **ஆண்டுக்கான ஏற்பாடு** | | |
| வே.க.சி.கு.ப.நி. | 137,305,835 | 95,954,471 |

(SRCC & Tr)

| | | | |
|---|---|---|---|
| பொதுக் காப்புறுதி – மோட்டார் வாகனம் மீள்காப்புறுதி | 364,777,173 | 61,174,979<br>563,257,987 | |
| வருட இறுதியிலுள்ளவாறு மீதி | | **1,622,656,295** | **1,059,398,308** |

**13 பிற்போடப்பட்ட தரகு**

| | 2013 | 2012 |
|---|---|---|
| வருடத் தொடக்கத்திலுள்ளவாறு மீதி | 176,532,688 | 161,486,715 |
| ஆண்டுக்கான ஏற்பாடு | 22,640,481 | 15,045,973 |
| வருட இறுதியிலுள்ளவாறு மீதி | **199,173,169** | **176,532,688** |

**14 திரண்ட நிதியம்**

| | 2013 | 2012 |
|---|---|---|
| வருடத் தொடக்கத்திலுள்ளவாறு மீதி | 5,912,918,517 | 8,497,449,708 |
| கழிப்பனவு: முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள், மோட்டார் | (5,964,896) | (467,554,357) |
| சேர்த்தல்: முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள் - வே.க.சி.கு. (SRCC) | 2,863,411 | |
| திரட்டு நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட விதிப்பனவு | (3,200,000,000) | (4,200,000,000) |
| ஆண்டுக்கான நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்/(நட்டம்) | 4,240,847,242 | 2,083,023,166 |
| வருட இறுதியிலுள்ளவாறு மீதி | **6,950,664,274** | **5,912,918,517** |

**15 சென்மதி உரிமைக்கோரிக்கைகள்**

| | 2013 | 2012 |
|---|---|---|

மீள்காப்புறுதி

| | | |
|---|---|---|
| | 86,530,984 | 113,798,695 |
| வே.க.சி.கொ.ப.நி. (SRCC & Tr) | 66,665,233 | 79,783,010 |
| பொதுக் காப்புறுதி – மோட்டார் வாகனம் | 13,505,808 | 4,326,944 |
| பொதுக் காப்புறுதி – மருத்துவமும் ஏனையவையும் | 2,236,590 | 2,236,590 |
| பயிர்க் காப்புறுதி | 4,738,899 | - |
| அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம் | 99,382,821 | 85,932,811 |
| | **273,060,335** | **286,078,050** |

**16 ஏனைய சென்மதிகள்**

| | 2013 | 2012 |
|---|---|---|
| அட்டுறு செலவினங்கள் | 2,980,920 | 11,021,633 |
| ஏனைய சென்மதிகள் | 5,189,573 | 1,381,289 |
| வே.க.சி.கொ.ப.நி. இற்கான சென்மதிகள் | - | 8,075,322 |
| பணிக்கொடை கொடுப்பனவுகளிற்கான ஏற்பாடு | 7,799,474 | 2,897,037 |
| சென்மதியாகவுள்ள வீதிப் பாதுகாப்பு வரி | 446,907 | 527,485 |
| சென்மதியாகவுள்ள தவணைக் கட்டண மீளளிப்பு | 11,928,872 | 11,844,581 |
| சென்மதியாகவுள்ள இலாபத் தரகு | 12,287,375 | 12,287,375 |
| சென்மதியாகவுள்ள உரிமைக்கோரிக்கை காசோலைகள்/ SLIP மீளளிப்பு | 4,254,343 | 2,801,352 |
| சென்மதியாகவுள்ள கணக்காய்வுக் கட்டணம் | 640,000 | 460,000 |
| சென்மதியாகவுள்ள பெ.சே.வ. (VAT ) மற்றும் தே.க.வ. (NBT ) | (14,353,408) | 35,784,845 |
| | **31,174,057** | **87,080,920** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்


**தேசிய காப்புறுதிநம்பிக்கைப்பொறுப்புநிதிய சபை**

## வருமானக் கூற்று - பிரிவு மீளாய்வு

*2013 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது*

(இலங்கை ரூபாவில்)

| | பொது | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மோட்டார் | மருத்துவம் மற்றும் ஏனையவை | மீள்காப்புறுதி | வே.க.சி.கொ. ப.நி. (SRCC & Tr.) | மருத்துவத் தி அக்ரஹார / பா | பயிர்க் காப்பு திட்டம் | மொத்தம் |
| மொத்த உழைப்புத் தவணைக் கட்டணம் | 174,785,654 | 17,915,562 | 1,042,220,495 | 2,543,782,803 | 10,000,000 | 379,328,695 | 4,168,033,208 |
| அக்ரஹாராவிற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பங்களிப்பு | | | | | 1,406,706,842 | | 1,406,706,842 |
| சேகரிக்கப்பட்ட பயிர்க் காப்புறுதி விதிப்பனவு | | | | | | 440,836,600 | 440,836,600 |
| ஈட்டப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கில் தேறிய மாற்றம் | (61,174,979) | | (364,777,173) | (137,305,835) | | | (563,257,987) |
| **மொத்த ஈட்டப்பட்ட தவணைக் கட்டணம்** | 113,610,675 | 17,915,562 | 677,443,322 | 2,406,476,968 | 1,416,706,842 | 820,165,295 | 5,452,318,662 |
| மீள்காப்புறுதிக்கு மீளளிக்கப்பட்ட தவணைக் கட்டணம் | - | - | - | - | - | - | - |
| ஈட்டப்படாத மீள்காப்புறுதி தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கில் தேறிய மாற்றம் | - | - | - | - | - | - | - |
| **தேறிய ஈட்டப்பட்ட தவணைக் கட்டணம்** | **113,610,675** | **17,915,562** | **677,443,322** | **2,406,476,968** | **1,416,706,842** | **820,165,295** | **5,452,318,662** |
| <u>வேறு வருமானம்</u> | | | | | | | |
| நிதி வருமானம் | 49,189,560 | 26,659,065 | 54,875,913 | 553,939,123 | 2,388,510 | 10,355,805 | 697,407,976 |
| நிகர தேறிய இலாபம் | | | 3,303,729 | - | | | 3,303,729 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 722,996 | 136,776 | | 1,500 | | | 861,272 |
| | 49,912,556 | 26,795,840 | 58,179,642 | 553,940,623 | 2,388,510 | 10,355,805 | 701,572,977 |
| **மொத்த தேறிய வருமானம்** | **163,523,231** | **44,711,402** | **735,622,964** | **2,960,417,591** | **1,419,095,352** | **830,521,100** | **6,153,891,639** |
| **நன்மைகள் உரிமைக்கோரிக்கைகள் மற்றும் செலவினங்கள்** | | | | | | | |
| தேறிய காப்புறுதி நன்மையும் உரிமைக்கோரிக்கையும் | (116,636,252) | (85,707,270) | (20,730,824) | (2,331,835) | (1,145,456,834) | (10,436,648) | (1,381,299,662) |
| மீள்காப்புறுதி உத்தரவாத மற்றும் அடைதல் கிரயம் | - | - | - | (382,177,026) | - | - | (382,177,026) |
| ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள் | (23,453,028) | (5,863,257) | (11,726,514) | (23,843,495) | (70,359,083) | (5,863,257) | (141,108,634) |
| நிதிக் கிரயம் | (11,343) | (15,251) | (16,640) | (8,402,225) | (13,616) | - | (8,459,075) |
| **மொத்த நன்மைகள் உரிமைக்கோரிக்கைகள் மற்றும் செலவினங்கள்** | **(140,100,623)** | **(91,585,777)** | **(32,473,977)** | **(416,754,582)** | **(1,215,829,533)** | **(16,299,905)** | **(1,913,044,397)** |
| **வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)** | **23,422,608** | **(46,874,376)** | **703,148,986** | **2,543,663,009** | **203,265,819** | **814,221,195** | **4,240,847,242** |
| வருமான வரிச் செலவினங்கள் | - | - | - | | - | - | - |
| திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட விதிப்பனவு | | | | (249,000,000) | | (710,000,000) | (3,200,000,000) |
| **ஆண்டுக்கான இலாபம்/ (நட்டம்)** | **23,422,608** | **(46,874,376)** | **703,148,986** | **53,663,009** | **203,265,819** | **104,221,195** | **1,040,847,242** |



# 10. கணக்காய்வாளர் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. எப்.ஆர்(2)/ஐ/என்ஐரீஎப்/1/13/25

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2015 மே 20

தலைவர்
தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

**தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிதியத்தின் தலைவருக்கு 2014 திசெம்பர் 12 ஆம் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

2

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2.3(அ), (ஆ) மற்றும் 2.2.5 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்கள் அதற்கமைய தயாரித்து சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன், இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி மேற்கொள்ளாத காரணத்தினால் நிதிச்சொத்துக்கள் அல்லது நிதிப் பொறுப்புக்கள் நியாயமான பெறுமதிக்கு வகைப்படுத்தப்பட்டு முகப்பு

பெறுமதியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிறுவனத்தின் மூலம் தேவைப்படுத்தப்படும் அல்லது அனுமதியளிக்கப்பட்டுள்ளவை தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு ஈடுசெய்யப்பட முடியாத போதிலும் 13 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 360,514,789 கூட்டுத்தொகையான வங்கி மீதிகள் மற்றும் 02 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 55,162,561 கூட்டுத்தொகையான வங்கி மேலதிகப் பற்று மீதிகளுக்கு எதிரீடு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் நிதியத்திற்குச் சொந்தமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், பயன்படு ஆயுட்காலம் முடிவடைந்த தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 9,578,750 கிரயமான இரண்டு வாகனங்களின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

2012 ஆம் ஆண்டிற்காக பணிக்கொடை ஒதுக்கீடு 5 ஆண்டுகள் தொடர்ச்சியான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருந்த உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டில் ஓராண்டு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருந்த உத்தியோகத்தர்களுக்காகவும் பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் போது பணிக்கொடை ஒதுக்கீடுகளில் ரூபா 5,072,504 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்ட போதிலும், பணிக்கொடை ஒதுக்கீடு தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 8 இன் 28 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள் எதுவும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தால் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்காக அறிமுகப்படுத்தப்பட்ருந்த காப்புறுதி முறைமை 2012 ஏப்ரல் 28 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டிருந்த போதிலும், 2012 மே மாதத்திலிருந்து 2014 ஆகஸ்ட் மாதம் வரை அக்காப்புறுதி முறைமைக்காக ரூபா 219,928,591 கூட்டுத்தொகையான இழப்பீடு விண்ணப்பங்களுக்கு ஏனைய காப்புறுதி முறைமையின் கீழ் பெறப்பட்ட தவணை வருமானத்தைப் பயன்படுத்தி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது வங்கிக் கணக்கில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 7,215,904 ஆன காசேட்டின் மீதி மற்றும் அத்திகதியில் உள்ளவாறான ரூபா 1,251,008 என வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காணப்படும் காசேட்டின் மீதிக்கும் இடையே ரூபா 5,964,896 ஆன வேறுபாடொன்று காணப்பட்டதுடன், அவ்வேறுபாடு மீளாய்வாண்டின் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டதன் காரணமாக திரண்ட நிதியம் ரூபா 5,964,896 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

4 வங்கிக் கணக்குகளின் பரீட்சை நிலுவை /நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட வங்கி மீதிகள் மற்றும் வங்கி கணக்கிணக்கக் கூற்றில் காணப்படும் மீதிகள் என்பவற்றிற்கிடையே ரூபா 38,500,000 ஆன வரவு மற்றும் ரூபா 26,288,162 ஆன செலவு மீதிகளில் வேறுபாடு காணப்பட்டன.

2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு விடயங்களுக்கும் முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் அவற்றை கணக்காய்வின் போது சான்றுறுதி செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

6

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| (i) | ஏனைய கிடைக்க வேண்டிய தொகை | 871,139,458 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் |
| (ii) | ஏனைய செலுத்த வேண்டிய தொகை | 31,174,057 | விரிவான பட்டோலைகள் |
| (iii) | செலுத்த வேண்டிய காப்புறுதி இழப்பீடு | 273,060,335 | காலப்பகுப்பாய்வு |
| (iv) | சேமிப்புக் கணக்குகள் | | மீதி உறுதிப்படுத்தல் |
| | மக்கள் வங்கி | 20,404,203 | கணக்கு பாஸ் புத்தகம் |
| | பான் ஏசியா வங்கி | 1,191,137 | கணக்கு பாஸ் புத்தகம் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் |
| (v) | நடைமுறைக் கணக்குகள் | | |
| | மக்கள் வங்கி | 22,913,768 | வங்கிக் கணக்கிணக்கக் கூற்று |
| | மக்கள் வங்கி | (54,516,844) | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று |
| | மக்கள் வங்கி | 137,478,867 | |

2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

நிதியத்தின் கீழ் செயற்படுத்தப்படும் வேலை நிறுத்தம், பகிஷ்கரிப்பு, கலவரங்கள், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாதிகளின் நிதியத்தின் 2008 ஆம் ஆண்டிற்குரிய இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டியிருந்த இலாபத் தரகு ரூபா 12,287,375 தொகை 2010 ஆம் ஆண்டிலிருந்து தீர்வுசெய்யப்படாது கணக்காய்வு திகதியான 2014 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரையிலும் காணப்பட்டன.

7

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்ளுடனான இணங்காமைகள்

கணக்காய்வின் போது பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 6 (1) ஆம் பந்தி | சுகாதார விடயம் கையளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 சனவரி 15 ஆம் திகதி வரை அந்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் அத்தியாயம் | நிதியத்தினால் நிர்வாக கைநூலொன்று தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை அடுத்த ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வறிக்கை 2014 திசெம்பர் 29 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2011 செப்தம்பர் 15 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 58(2) 3.1 ஆம் பந்தி | பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்காக படிகள் செலுத்தும் போது 10 சதவீதம் நிறுத்தி வைத்தல்கள் வரி கழிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பணிப்பாளர் சபை அங்கத்தவர் |

8

களுக்கு செலுத்தப்பட்ட படிகளிருந்து அவ்வாறு கழிப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | |
|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 102/104 | நிதியத்தால் 2013 யூலை 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த பொருள் மெய்மையாய்வில் வெளிப்படுத்தப்பட்ட 69 உருப்படிகளின் பற்றாக்குறை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | வழங்கப்பட்ட உப கட்டுநிதி அது வழங்கப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தியடைந்த உடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 04 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 23,000 தொகையான முற்பணங்களை தீர்த்துவைத்தல் 30 நாட்கள் அளவில் தாமதமாகியிருந்தன. |
| (iii) நிதிப் பிரமாணம் 371(5) | உப கட்டுநிதி மீதியைத் தீர்வு செய்தல் அக்கட்டுநிதி வழங்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை தாமதப்படுத்த கூடாத போதும் 07 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 86,000 கூட்டுத்தொகையான கட்டுநிதி மீதி 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்தன. |

9

(iv) நிதிப் பிரமாணம் 396(ஈ) — மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்ட திகதி முதல் 06 மாதங்களுக்கு மேற்பட்ட சமர்ப்பிக்கப்படாத ரூபா 44,541,842 தொகையான 20 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிக்காக நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 4,240,847,242 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,083,023,167 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 2,157,824,076 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இதற்காக தேறிய காப்புறுதி தவணைப் பண தேறிய வருமானம், அக்ரஹார பங்களிப்பு பெறுவனவு மற்றும் பயிர்க் காப்புறுதி வருமானம் என்பன முறையே ரூபா 1,048,026,316 தொகை, ரூபா 543,271,321 தொகை மற்றும் ரூபா 440,836,600 தொகை என்பன அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதியத்தின் கீழ் செயற்படுத்தப்படும் வேலைப் பகிஷ்கரிப்பு, கலவரங்கள், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாதிகளின் நிதியம் என்பவற்றிற்காக கிடைக்கப்பெறும் வருமானம் நிதியத்தின் பிரதான வருமான மார்க்கமாக இருந்ததுடன், யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் அச்செயற்பாட்டிற்கான காப்புறுதி மேவுகைக்காக உள்ள கேள்வி குறைவடைந்தமையால் அதில் பயங்கரவாத செயற்பாடுகளுக்குரித்தாக அறவிடப்படுகின்ற சதவீதம் திருத்தம் செய்யப்பட்டமையால் நிதியத்திற்காக கிடைக்கப்பெறும் தவணைப் பண வருமானம் 2010 ஆம் ஆண்டில் ரூபா 3,926,469,856 ஆக இருந்ததுடன், அப்பெறுமானம் 2013 ஆம் ஆண்டளவில் ரூபா 2,543,930,179 வரை பொருண்மையாக குறைவடைந்திருந்தது.

பங்கு மூலதனம் இல்லாமல் செயற்படுத்தப்படும் இந்நிதியத்திலிருந்து திரட்டிய நிதியத்திற்காக வழங்கப்பட்டிருந்த பங்களிப்பு காரணமாக திரண்ட நிதிய் மீதி குறைவடைவதற்கான தீர்வாக 2011 மார்ச் 11 ஆம் திகதி நடைபெற்ற 58 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது திரண்ட நிதியத்திற்காக ரூபா 10 பில்லியன் புறம்பாக ஒதுக்கமொன்றாக பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும் முன்னைய ஆண்டுகளில் அந்த ஒதுக்கத்தை அல்லது திரண்ட நிதியத்தின் ஆகக்குறைந்த மீதியை பராமரிப்பதற்கு நிதியம் தவறியிருந்தது. 2010 ஆம் ஆண்டில் திரண்ட நிதியத்தில் ரூபா 9,695,467,155 தொகையான மீதி மீளாய்வாண்டு வரையிலும் ரூபா 6,942,528,728 வரை குறைவடைந்திருந்து.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2010 யூலை 27 ஆம் திகதி ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாத காலத்திற்காக 68 வயதுக்கு மேற்பட்டிருந்த நபரொருவரை உதவிப் பணிப்பாளராக (ஒழுக்காற்று மற்றும் இழப்பீட்டு புலனாய்வு) சேர்க்கப்பட்டிருந்தார். 2010 யூன் 22 ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் எத்தகைய விடுமுறையொன்றும் உரித்தாகாத வகையிலும் பணிப்பொறுப்பின் பிரகாரமும் படிகள் கொடுப்பனவு அடிப்படையில் மேற்குறித்த நபர் புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவராக சேர்ப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எனினும் ரூபா 27,500 மாதாந்த சம்பளம் மற்றும் ஏனைய வசதிகளையும் வழங்கி முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் இந்நபர் நிர்வாக மற்றும் மனிதவள மதியுரையாளர் பதவிக்கு சேர்க்கப்பட்டிருந்ததுடன், அவரின் வேண்டுகோளின் பேரில் சேர்க்கப்பட்ட திகதியிலிருந்து 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 6 மாதங்களில் 6 மாதங்கள் என ஒப்பந்தகாலம் நீடிக்கப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நிதியத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்த ஒவ்வொரு பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கீழ் பதிவு செய்து தொழிலுக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்காக நிதியத்தினால் காப்புறுதி முறைமையொன்று அறிமுகப்படுத்தப் பட்டிருந்ததுடன், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கும் நிதியத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நிதியத்தினால் 2008 யூன் 01 ஆம் திகதி முதல் 2012 ஏப்ரல் 28 ஆம் திகதி வரையிலும் அது செயற்படுத்தப்பட்டு காணப்பட்டது. இதன் கீழ் அக்காலப்பகுதியில் ரூபா 247,378,731 கூட்டுத்தொகையான தேறிய வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் ஒரு தரப்பான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் குறித்த உடன்படிக்கையை முடிவுறுத்துவதாக 2012 மார்ச் 30 ஆம் திகதி நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்ததன் அடிப்படையில் இக்காப்புறுதி முறைமை தற்போது நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதியத்திற்கு சாதகமான முறையில் செயற்படுத்தப்பட்ட இக்காப்புறுதி முறைமையை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக உரிய தரப்பினருடன் கலந்தாலோசித்து தேவையான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியம் எந்தவொரு முயற்சியொன்றையும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக கூட்டுக் காப்புறுதி முறைமையொன்று நிதியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் வருடாந்த காப்புறுதி தவனைப் பணம் நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறையான திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் அறவிடப்பட்ட வருடாந்த காப்புறுதி தவணைப் பணத்தை மிகைத்து ரூபா 7,898,710 கூட்டுத்தொகையான நலன்கள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) விவசாயிகளின் நெற் பயிர்ச்செய்கைக்கு வரட்சியாலும் வெள்ளத்தினாலும் மற்றும் யானைகளினாலும் ஏற்படும் சேதங்களை பாதுகாக்கும் நோக்கில் 2013 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் நிதியத்தினால் பயிர் காப்புறுதி அறிமுகப்படுத்தப் பட்டிருந்ததுடன், இது தொடர்பாக 2013 யூன் 21 ஆம் திகதிய BD/FE/118/01/BP/2013 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை மூலம்

அனைத்து விவசாயிகளும் காப்புறுதி செய்வது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. விவசாயிகளால் பசளை கொள்வனவு செய்யும் போது அதற்குரிய தவணைப் பணத்தை அறவிடுவது கமநலசேவை நிலையங்களினாலும் கூட்டுறவுச் சங்கங்களினாலும் மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வாறு அறவிடப்படுகின்ற பணத்தை வாராந்தம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கணக்கிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், விவசாயிகளிடமிருந்து அறவிடப்படுகின்ற சகல பணமும் வங்கியில் வைப்புச் செய்யப்படுகின்றதா என்பதனை உறுதிப்படுத்துவற்காக முறையான வேலைத்திட்டமொன்றை நிதியம் அறிமுகப்படுத்தியிருக்க வில்லை. அவ்வாறே பெரும் போகத்தில் வரட்சியால் பயிர்ச்செய்கைக்கு பாதிப்பு ஏற்பட்ட காரணத்தினால் 2014 செப்தெம்பர் 16 ஆம் திகதி வரையிலும் நிதியத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த 68,359 நட்டஈட்டு விண்ணப்பங்களில் 15,240 விண்ணப்பங்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், மேலும் 53,119 விண்ணப்பங்களுக்கு கொடுப்பனவை மேற்கொள்ள இருந்தமையால் இப்பயிர்ச்செய்கை காப்புறுதி முறைமை தொடர்பில் வைத்திருக்கக் கூடிய நம்பிக்கை வீணாகுவதாகவும் அதனால் இதன் மூலம் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த அக்ரஹார காப்புறுதி முறைமையை நடைமுறைப்படுத்தும் போதும் பங்களிப்பு பணத்தை அறவிடும் போதும் வெவ்வேறு நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்ற அனுப்புகைகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முறையான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்படாமல் இருந்ததுடன், பங்களிப்புத் தொகையை தாமதமில்லாமல் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை. அவ்வாறே சேவை நிலையங்களின் அனைத்து ஊழியர்களும் இக்காப்புறுதி முறைமையின் கீழ் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்களா என்பதைப் பரீட்சிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதியத்தினால் 2008 ஆம் ஆண்டிலிருந்து சகல அரச நிறுவனங்களுச் சொந்தமான வாகனங்களின் காப்புறுதியினையும் 2009 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் தனியார் வாகனங்களுக்கான காப்புறுதியும் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2009 செப்தெம்பர் 18 ஆம் திகதிய பீஎப் 437

ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் சகல அரச மற்றும் அரை அரச நிறுவனங்கள் தமது தேவைப்பாட்டின் பிரகாரம் மோட்டார் வாகனங்களுக்குரிய காப்புறுதியை தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்தும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்தும் மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக 2013 பெப்ரவரி 18 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது பொது முயற்சிகள் தவிர ஏனைய நிறுவனங்களின் மோட்டார் வாகனங்களுக்கான காப்புறுதிகளுக்கு மாத்திரம் இக்காப்புறுதி நடவடிக்கைகளை மட்டுப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் வரை காப்புறுதி செய்யப்பட்ட 7321 அரச வாகனங்களின் எண்ணிக்கையில் அதாவது 45 சதவீதத்தாலும் வருடாந்த வருமானம் ரூபா 158 மில்லியனாலும் குறைவடைந்திருந்ததுடன், காப்புறுதி செய்யப்பட்ட தனியார் வாகனங்களின் எண்ணிக்கையும் 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் போது வாகனங்களின் எண்ணிக்கை 2736 ஆலும் வருமானம் 9 மில்லியனாலும் குறைவடைந்திருந்தது.

4.2 பதவியணியினர் நிருவாகம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை, உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு இருந்தது.

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 12 | 02 | 10 |
| மூன்றாம் நிலை | 16 | 16 | 0 |
| இரண்டாம் நிலை | 144 | 126 | 18 |
| ஆரம்ப நிலை | 24 | 18 | 06 |
| மொத்தம் | 196 | 162* | 34 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிதியத்தின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 34 அதாவது அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 17 சதவீதமாக இருந்தது. இதில் நிதியத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் உட்பட மேல் மட்ட முகாமையின் 10 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 30 இலக்க ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2012 செப்தெம்பர் 07 ஆம் திகதிய DMS /C2/2/44 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் நிதியத்திற்கான ஊழியர்களின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அத்திகதியிலிருந்து 02 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும், மேற்படி வெற்றிடங்களுக்காக பொருத்தமானவர்களை தெரிவுசெய்வதற்கு நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பிரதேச கிளை முகாமையாளர் பதவியொன்று உட்பட 09 பதவிகள் முறையான அங்கீகாரமின்றி தற்காலிக நியமனம் மூலம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 30 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றிற்கிடையே 29 சதவீதம் முதல் 2557 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு சிறந்த நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

5.3 உள்ளகக் கணக்காய்வு

நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) பதவி வெற்றிடமாக காணப்பட்டதுடன், அப்பிரிவிற்கு இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரும் அக்ரஹார காப்புறுதிப் பிரிவின் பிரதிபலன் கொடுப்பனவுகளின் சரியானதன்மையைப் பரீட்சித்தல் போன்ற ஒவ்வொரு துறை சார்ந்த நடவடிக்கை மாத்திரம் மேவுகை செய்யப்பட்டிருந்தது. இதனால் நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வு மேலும் பலவீனமாக காணப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) காப்புறுதி பிரதிபலன் கொடுப்பனவு
(ஆ) சொத்து முகாமைத்துவம்
(இ) கணக்கீடு
(ஈ) பதவியணியினர் நிர்வாகம்
(உ) முற்பணம் வழங்கல்

ஒப்பம்: டபிள்யு.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)



# 11. ஒரே பார்வையில் எட்டு வருடங்கள்

# எட்டாண்டுப் பொழிப்பு – நிதிச் செயற்றிறன்

*(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)*

| டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | | | | | |
| தேறிய ஈட்டப்பட்ட தவணைக் கட்டண வருமானம் | 5,452,318,662 | 3,886,183,341 | 3,606,365,031 | 3,926,469,856 | 4,019,486,220 | 3,427,950,662 | 2,654,902,681 | 318,902,642 |
| **நன்மைகளும் நட்டங்களும் செலவினங்களும்** | | | | | | | | |
| காப்புறுதி உரிமைக்கோரல்கள் மற்றும் நன்மைகள் | (1,763,476,689) | (2,281,470,751) | (1,879,486,696) | (2,292,072,983) | (2,075,936,806) | (1,736,355,732) | (1,423,044,038) | (242,465,993) |
| | 3,688,841,974 | 1,604,712,590 | 1,726,878,335 | 1,634,396,873 | 1,943,549,415 | 1,691,594,930 | 1,231,858,643 | 76,436,649 |
| **ஏனைய வருமானம்** | | | | | | | | |
| முதலீட்டு வருமானம் | 691,492,020 | 615,813,544 | 723,412,241 | 798,117,037 | 1,364,459,074 | 1,205,463,441 | 528,264,787 | |
| மென் கடன்கள் மீதான வட்டி | 5,915,955 | 7,278,316 | 10,163,846 | 16,982,331 | 15,125,027 | 19,424,829 | 38,713,576 | |
| ஏனைய வருமானம் | 4,165,001 | 18,886,182 | 743,614 | 1,006,353 | 471,787 | 917,841 | | |
| | 701,572,977 | 641,978,043 | 734,319,701 | 816,105,721 | 1,380,055,889 | 1,225,806,111 | 1,798,837,006 | 76,436,649 |
| **செலவினம்** | | | | | | | | |
| அலுவலர் குழாம் சார்ந்த கிரயம் | 76,487,490 | 72,006,709 | 52,769,174 | 42,326,032 | 33,124,615 | 21,470,147 | 11,500,953 | 1,333,806 |
| நிர்வாகச் செலவுகள் | 64,621,143 | 74,402,484 | 72,147,229 | 45,136,006 | 49,246,381 | 28,264,346 | 14,142,950 | 1,508,940 |
| நிதி மற்றும் ஏனைய செலவுகள் | 8,459,075 | 17,258,273 | 21,581,925 | 32,425,697 | 38,401,103 | 5,380,035 | 3,385,205 | 138,170 |
| **மொத்தச் செலவினம்** | 149,567,708 | 163,667,466 | 146,498,329 | 119,887,735 | 120,772,099 | 55,114,528 | 29,029,109 | 2,980,916 |
| **வரி விதித்தல்** | | | 108,349,446 | | | | | |
| **செலவிலுங்கூடிய வருமானம்** | **4,240,847,242** | 2,083,023,166 | 2,206,350,261 | 2,330,614,859 | 3,202,833,203 | 2,862,286,514 | 1,769,807,897 | 73,455,733 |

# எட்டாண்டுப் பொழிப்பு - நிதி நிலைமை

*(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)*

*டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது*

| | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 19317968 | 24,739,202 | 29,606,877 | 36,096,011 | 43,603,504 | 44,659,781 | 25,240,465 | 1,461,388 |
| முதலீடுகள் | 6667518021 | 5,375,914,672 | 4,444,546,262 | 5,574,107,464 | 8,550,206,721 | 7,749,178,616 | 5,449,343,240 | |
| | 6686855988 | 5,400,653,874 | 4,474,153,140 | 5,610,203,475 | 8,593,810,225 | 7,793,838,397 | 5,474,583,705 | 1,461,388 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | | |
| வருமதிகள் | 1686049990 | 1,664,647,836 | 1,927,814,565 | 1,945,815,895 | 2,079,570,419 | 1,988,501,988 | 2,221,955,826 | 511,844,970 |
| காசும் காசுக்குச் சமமான விடயங்களும் | 305495813 | 103,641,397 | 3,542,969,945 | 3,594,104,553 | 110,173,003 | 239,795,258 | 560,259,122 | 13,357,202 |
| | | 1,768,289,233 | 5,470,784,510 | 5,539,920,448 | 2,189,743,421 | 2,228,297,246 | 2,782,214,948 | 525,202,172 |
| மொத்தச் சொத்துக்கள் | **8678381792** | 7,168,943,107 | 9,944,937,649 | 11,150.123,923 | 10,783,553,646 | 10,022,135,643 | 8,256,798,653 | 526,663,560 |
| உரிமை முதலும் பொறுப்பு முதலும் | | | | | | | | |
| திரண்ட நிதியம் | 6950664274 | 5,912,918,517 | 8,497,449,707 | 9,695,467,155 | 9,364,852,783 | 8,412,019,580 | 6,583,508,929 | 94,102,009 |
| | 6950664274 | 5,912,918,517 | 8,497,449,707 | 9,695,467,155 | 9,364,852,783 | 8,412,019,580 | 6,583,508,929 | 94,102,009 |
| **தொழில்நுட்ப ஒதுக்குகள்** | | | | | | | | |
| ஈட்டப்படாத தவணைக் கட்டணம் | 1622656295 | 1,059,398,308 | 963,443,837 | 821,564,804 | 1,046,825,276 | 1,063,317,772 | 877,695,727 | |
| பிற்போடப்பட்ட தரகு | (199,173,169) | (176,532,688) | (161,486,715) | (139,745,300) | (200,139,536) | (206,999,340) | (161,317,228) | |
| | 1423483136 | 882,865,620 | 801,957,122 | 681,819,505 | 846,685,740 | 856,318,432 | 716,378,499 | |
| **பொறுப்புக்கள்** | | | | | | | | |
| **நடப்புப் பொறுப்புக்கள் அல்லாதவை** | | | | | | | | |
| அரசாங்க கொடை | 66960 | 66,960 | 142,150 | 284,330 | 719,190 | 719,190 | 719,190 | 719,190 |
| சென்மதி இலாபத் தரகு | 12287375 | 12,287,375 | 12,287,375 | 12,287,375 | 63,762,150 | 113,635,474 | 83,722,067 | |
| | 12354336 | 12,354,336 | 12,429,525 | 12,571,705 | 64,481,340 | 114,354,664 | 84,441,257 | 719,190 |
| நடப்புப் பொறுப்புக்கள் | | | | | | | | |
| சென்மதி உரிமைக்கோரிக்கை | 273060335 | 286,078,050 | 392,410,772 | 518,000,207 | 329,499,921 | 333,321,632 | 602,777,397 | |
| ஏனைய சென்மதிகள் | 1881972 | 74726585 | 240,690,522 | 242,265,350 | 178,033,863 | 306,121,335 | 269,692,571 | 431,842,361 |
| | 291880056 | 360,804,635 | 633,101,294 | 760,265,557 | 507,533,784 | 639,442,967 | 872,469,968 | 431,842,361 |
| மொத்த உரிமை முதலும் பொறுப்பும் | 8678381792 | 7,168,943,108 | 9,944,937,649 | 11,150,123,923 | 10,783,553,647 | 10,022,135,643 | 8,256,798,653 | 526,663,560 |



# 12. கூட்டுரிமைத் தகவல்கள்

❖ ***நிறுவனத்தின் பெயர்:***

***தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்***

❖ ***சட்ட உருவாக்கம்***

2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட சபை

❖ **அலுவலக முகவரி**

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

இல. 97, மருதானை வீதி,

கொழும்பு 10

❖ **கணக்காய்வாளர்*:***

கணக்காய்வாளர் நாயகம்

❖ **வங்கியாளர்*:***

மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி